# அனுபவக் களஞ்சியம்

எஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.Ed.

# அனுபவக் களஞ்சியம்


மூன்று முறை தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா**

M.A, D.P.E, M.P.Ed, Ph.D.



ராஜ்மோகன் பதிப்பகம்

10 ரெங்கநாதன் தெரு

தி. நகர், சென்னை-17

தபால் பெட்டி எண் : 4955 தொலைபேசி எண் : 442232

BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | — | ANUBAVAK KALANJIAM |
| Author | — | Dr. S. NAVARAJ CHELLIAH |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | December 1984 |
| Copy Right | — | Dr. S. NAVARAJ CHELLIAH |
| Paper Used | — | 10.9 Kg. White Printing |
| Size | — | 17.5 × 12 cm. |
| Type Used | — | 12 Point |
| Pages | — | 80 |
| Printer | — | GRACE PRINTERS<br>27, Subba Reddy Street,<br>West Mambalam,<br>Madras - 600 033. |
| Publisher | — | RAJMOHAN PATHIPPAGAM<br>10, Ranganathan Street,<br>T.Nagar, Madras - 600 017. |

Price Rs. 5-50

# முன்னுரை

அனுபவங்கள் தான் ஒருவரை அறிவுடைய வராக மாற்றுகின்றன. ஆற்றல் உடையவராக ஏற்றுகின்றன.

அந்த அனுபவங்கள் எந்தத் தன்மையானதாக இருந்தாலும் தனது முன்னேற்றத்திற்கான உரங் களாகப் பயன்படுத்திக் கொள்கின்றவர்களே முன்னேற்றத்திற்காக முனைபவர்கள் ஆவார்கள்.

ஓர் உடற்கல்வி இயக்குநராகப் பணியினைத் தொடர்ந்த போது, 'பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவுமா என்ற பழமொழிக்கு ஏற்பவே என் வாழ்க்கை அமைந்திருந்தது.

எழுத்தே என் வாழ்கை என்ற சூழ்நிலை அமைந்து காரைக்குடி கல்லூரிப் பணியினைத் துறந்து, ராஜினாமா செய்துவிட்டு, சென்னைக்கு வந்தபோதுதான் 'எனது நிலைமை' புரிந்தது.

பள்ளியில் பணியாற்றி விட்டு, சென்னை டி. வி. எஸ். நிறுவனங்களில் விளையாட்டு அதிகாரியாகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது. எனது நிலைமை இன்னும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

வெறும் படிப்பும், பதவியும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவாது என்று ஒரு முடிவுக்கு வந்து, அந்த உத்தியோகத்தையும் உதறிவிட்டு முழுநேர எழுத்தாளனாக வாழ நேர்ந்த காலம் எனக்கு கடுமையான சோதனைக் காலம்.

அடுத்தடுத்து ஏற்பட்ட ஆயிரமாயிரம் சோதனைகள், அலறாமல் துடிக்க வைத்த அதி மோசமான சூழ்நிலைகள் எல்லாம் சிறந்த அனுபவங்களாக எனக்குத் தோன்றின. இன்னும் பெற வேண்டும் என்றும் தூண்டின.

எனது நூல்களை நானே பதிப்பித்து, விற்றாக வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டபொழுது, தினந் தினம் புதிய புதிய மனிதர்களை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

அப்படிப்பட்ட அகங்காரமான சூழ்நிலையில், அவதிப்பட்ட அலங்கோலமான மனோநிலையில், பெறப்பட்ட அனுபவங்கள் எல்லாம் என்னை தட்டிக் கொட்டி பக்குவமான மனோபாவத்திற்கு உட்படுத்தி அழைத்துச் சென்றன.

வந்த அனுபவங்களை முனுமுனுக்காமல் வாங்கிக் கொண்டேன். கசப்பான அனுபவங்களை மறந்து விடவும், இனிப்பான அனுபவங்களை தொடர்ந்து பெறவும் பழகிக் கொண்டேன்.

அத்தகைய கசப்பும் இனிப்பும் கலந்த அனுபவங்களை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்த போது, விளையாட்டுக் களஞ்சியத்தில் தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன்.

ஒரு சில சுவையான அனுபவக்கருத்துக்களை மட்டும் தொகுத்து, அனுபவக் களஞ்சியம் என்ற பெயரில் புத்தகமாக்கிக் உங்களிடம் தந்திருக்கிறேன்.

என் வாழ்க்கையில் நான் பலமுறை பெற்ற ஏற்ற இறக்கங்கள் என்னை கடுமையான உழைப்பாளி யாக்கி விட்டது. அதற்காக உதவிய அத்தனை பேர்களுக்கும், என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் ஆர்வம் எனக்குப் புரிகிறது.

இனி நீங்கள் படிக்கத் தொடங்கலாம்.

அழகாக அச்சிட்டுத் தந்த கிரேஸ் பிரிண்டார்ஸ், ஆக்கப்பணிகள் ஆற்றிய R. ஆதாம் சாக்ரட்டீஸ் அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றி.

அதிகமாக நூல்களை எழுதும் பணியில் என்னை ஆதரித்து ஊக்குவித்து வரும் அனைவருக் கும் என் நன்றி.

ஞானமலர் இல்லம் அன்பன்

சென்னை - 17. எஸ். நவராஜ் செல்லையா.

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| விளையாட்டுத்துறையில் ஆங்கிலம் தமிழ் அகராதி | 15 | 00 |
| விளையாட்டுக்களின் கதைகள் (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 15 | 00 |
| விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும் (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 11 | 00 |
| ஒலிம்பிக் பந்தயத்தின் கதை (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 5 | 00 |
| கிரிக்கெட் ஆட்டத்தின் கதை | 4 | 50 |
| விளையாட்டுகளுக்கு பெயர் வந்தது எப்படி ? | 3 | 25 |
| விளையாட்டு உலகில் வீரக் கதைகள் | 3 | 00 |
| வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள் | 3 | 25 |
| கேரம் விளையாடுவது எப்படி ? | 6 | 00 |
| சதுரங்கம் விளையாடுவது எப்படி ? | 4 | 00 |
| கால்பந்தாட்டம் | 4 | 00 |
| கைப்பந்தாட்டம் | 4 | 00 |
| கூடைப்பந்தாட்டம் | 4 | 00 |
| பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள் | 8 | 00 |
| இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள் | 6 | 00 |
| நீங்களும் உடலழகு பெறலாம் | 5 | 00 |
| நீங்களும் உயரமாக வளரலாம் | 4 | 50 |
| பெண்களும் பேரழகு பெறலாம் | 4 | 00 |
| உடலழகுப் பயிற்சி முறைகள் | 3 | 25 |

| | | |
|---|---|---|
| தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | 5 | 00 |
| நல்ல கதைகள் பாகம் I | 3 | 00 |
| நல்ல கதைகள் பாகம் II | 1 | 50 |
| நல்ல கதைகள் பாகம் III | 1 | 50 |
| கடவுள் கை விடமாட்டார் | 2 | 00 |
| பண்புதரும் அன்புக் கதைகள் | 3 | 00 |
| நல்ல நல்ல கதைப் பாடல்கள் | 3 | 00 |
| நல்ல பாடல்கள் | 1 | 75 |
| செங்கரும்பு | 2 | 00 |
| விளையாட்டுத் துறையில் சொல்லும் பொருளும் | 4 | 50 |
| விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள் | 5 | 00 |
| வாழ்க்கைப் பந்தயம் | 6 | 00 |
| பாதுகாப்புக் கல்வி | 2 | 50 |
| சிந்தனைச் சுற்றுலா | 4 | 50 |
| தெரிந்தால் சமயத்தில் உதவும் | 5 | 00 |
| விளையாட்டு ஆத்திசூடி | 5 | 50 |
| விளையாட்டுக்களில் விநோதங்கள் | 6 | 00 |
| இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள் | 6 | 50 |
| நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம் | 5 | 50 |
| நீங்களும் நோயில்லாமல் வாழலாம் | 5 | 00 |
| 1984ல் ஒலிம்பிக் பந்தயங்கள் | 8 | 25 |
| விளையாட்டுத் துறையில் கலைச்சொல் அகராதி | 10 | 00 |
| உபயோகமுள்ள உடல்நலக் குறிப்புகள் | 7 | 00 |
| வளைகோல் பந்தாட்டம் | 4 | 00 |
| கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில் | 4 | 00 |
| பூப்பந்தாட்டம் | 5 | 00 |
| மென்பந்தாட்டம் | 6 | 00 |
| வளையப்பந்தாட்டம் | 2 | 50 |
| விளையாட்டுக்களின் விதிகள் | 14 | 00 |
| நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் | 6 | 00 |
| ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள் | 9 | 00 |
| கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள் | 6 | 50 |

| | | |
|---|---|---|
| பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் | 3 | 50 |
| விளையாட்டு விருந்து | 5 | 00 |
| விளையாட்டு விழா நடத்துவது எப்படி ? | 5 | 00 |
| விளையாட்டு அமுதம் | 3 | 50 |
| விளையாட்டு உலகம் | 3 | 50 |
| விளையாட்டுச் சிந்தனைகள் | 3 | 00 |
| விளையாட்டுக்களில் விருடி வினா விடை | 3 | 50 |
| General Knowledge in Sports and Games | 1 | 25 |
| How to Break Ties in Sports and Games | 3 | 00 |
| Quotations on sports and Games | 7 | 00 |

# அனுபவக் களஞ்சியம்

---

**நல்ல பாடம்**

ஒரு குடும்பத்தின் தலைவி படித்தவளாக இருந்தால், அந்தக் குடும்பத்தில் ஆயிரம் ஆசிரியைகள் இருப்பதற்கு சமம் என்பார்கள். அது போலவே ஒரு குடும்பத்தின் தலைவி பலமும் சக்தியும், நோயில்லாத தேகமும் உடையவளாக இருந்தால், அந்தக் குடும்பத்தில் ஆயிரம் டாக்டர்கள் இருப்பதற்கு சமம் என்பதை அனுபவம் நன்றாகவே கூறுகிறது. ஆனால், அந்தப் பாடத்தைக் கேட்கத்தான் ஆளில்லை.

o o o

**பண்பாட்டு மேடை**

உணர்ச்சி வயப்படுகின்ற நேரத்தில் ஆவேசத்தின் எழுச்சி ஆட்சி புரிகின்ற சமயத்தில், தன்னை சுற்றிலும் உள்ளவர்கள் மற்றவர்களை விட தன்னையே அதிகம் மதிக்க வேண்டும் என்ற வேகத்தில் செயல்படுகின்ற சூழ்நிலையில், எதிர்த்து

நிற்போரிடம் பண்புடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று ஒருவர் முயல முடியுமா? அப்படி ஒரு அரிய மனப்பக்குவத்தைத்தான் விளையாட்டுப் போட்டிகள் அளிக்கின்றன. வளர்க்கின்றன. உருவாக்குகின்றன.

o o o

**வேண்டாத வேலை**

உடற்கல்வி ஆசிரியர்களை, விளையாட்டுத் துறையில் உள்ளவர்களை, போட்டிகள் நடத்தத்தான் சொன்னார்களே தவிர, போட்டி போட்டுக் கொண்டு பிரிவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று யார் சொன்னது? ஆற்றில் நீராடப் போய், நீரோடு போன கதையாயிருக்கிறதே?

o o o

**உண்மை புரியும்**

விளையாட்டில் விதி முறைகளுக்கடங்கி, மாற்றாரை மதித்து பண்புள்ளவனாக விளையாடுபவரே வாழ்க்கையிலும் பண்புள்ளவர்களாக நடந்து கொள்வார்கள். வம்பர்களாகவும் வல்லடி கண்டர்களாகவும் விளையாடியவர்கள், தமது வாழ்க்கையில் அதைவிட மோசமானவர்களாகவே இருக்கின்றார்கள். இதை நீங்கள் வேண்டுமானால் சோதித்துப் பாருங்கள். உண்மை புரியும்.

**கலைஞனும் கடையனும்**

கவர்ச்சியை ரசிப்பவன் கலைஞன் ஆகிறான். கவர்ச்சியை ருசிப்பவன் கடையன் ஆகிறான். கஷ்டங்களை அடைகிறான். மனதால் பெறும் மகிழ்ச்சியோ நீடிக்கும். உடலால் பெறும் மகிழ்ச்சியோ உடலை விரைவில் உருக்குலைக்கும்.

O O O

**அரசியலும் விளையாட்டும்**

அரசியலில் விளையாட்டு என்பது சிகரெட்டில் தீ வைப்பது போல! விளையாட்டில் அரசியல் என்பது வீட்டுக்குத் தீ வைப்பது போல!

O O O

**கண்ணான தூண்**

சக்தியுள்ள ஓர் ஆண்
சமுதாயத்தின் தூண்.
சக்தியுள்ள ஒரு பெண்
சமுதாயத்திற்கு கண்.

O O O

**குத்துச் சண்டை வாழ்க்கை**

வாழ்க்கைஎன்பது ஒருவர் எமனோடு போடுகிற குத்துச் சண்டை மாதிரி. எமன் முகத்திலே குத்திக் கொண்டு இருக்கும் வரைக்கும் சந்தோஷம்தான். ஜெயிச்சுகிட்டு இருக்குற வரைக்கும் சண்டை

நீடிக்கும். எமன் என்றைக்கு ஜெயிக்கிறானோ, மனிதருக்கு அப்ப அது நாக் அவுட் ஆயிடும். அப்புறம் ஏது சண்டை? எத்தனை முறை எண்ணினாலும், அப்புறம் மனிதன் எழுந்திருக்கவே முடியாது.

O O O

**ஒப்பனை எதற்கு?**

எத்தனை தடவை திருப்பித் திருப்பிக் கண்ணாடியில் பார்த்தாலும், பலகோணத்தில் திரும்பித் திரும்பிப் பார்த்தாலும், இருக்குற முக அழகைத் தான் கண்ணாடி காட்டும். இல்லாத அழகை எப்படி ஏற்றியா காட்டும்?

முக அழகுங்குறது உள்ளத்துல இருக்குற உன் அழகை வெளியே காட்டுவதுதான். நல்ல மனசும் நல்ல நினைவும் இருந்தால்தான், முகத்தில் ஒருவித தெளிவும், ஒய்யாரமான பொலிவும் நிறைஞ்சிருக்கும்.

அந்த நல்ல மனசும் நல்ல நினைவும் தர்றது நல்ல சக்தியுள்ள உடம்புதான். உடம்பை சக்தியா வச்சுகிட்டா, முகஅழகு தானகவே வந்துடும். ஒரு கம்பீரமும் இயற்கையாகவே வந்துடும். அப்புறம் ஒப்பனை சாமானெல்லாம் எதுக்கு? வேண்டாத வேலைதானே!

O O O

நீடிக்கும். எமன் என்றைக்கு ஜெயிக்கிறானோ, மனிதருக்கு அப்ப அது நாக் அவுட் ஆயிடும். அப்புறம் ஏது சண்டை? எத்தனை முறை எண்ணினாலும், அப்புறம் மனிதன் எழுந்திருக்கவே முடியாது.

O O O

**ஒப்பனை எதற்கு?**

எத்தனை தடவை திருப்பித் திருப்பிக் கண்ணாடியில் பார்த்தாலும், பலகோணத்தில் திரும்பித் திரும்பிப் பார்த்தாலும், இருக்குற முக அழகைத் தான் கண்ணாடி காட்டும். இல்லாத அழகை எப்படி ஏற்றியா காட்டும்?

முக அழகுங்குறது உள்ளத்துல இருக்குற உன் அழகை வெளியே காட்டுவதுதான். நல்ல மனசும் நல்ல நினைவும் இருந்தால்தான், முகத்தில் ஒருவித தெளிவும், ஒய்யாரமான பொலிவும் நிறைஞ்சிருக்கும்.

அந்த நல்ல மனசும் நல்ல நினைவும் தர்றது நல்ல சக்தியுள்ள உடம்புதான். உடம்பை சக்தியா வச்சுகிட்டா, முகஅழகு தானகவே வந்துடும். ஒரு கம்பீரமும் இயற்கையாகவே வந்துடும். அப்புறம் ஒப்பனை சாமானெல்லாம் எதுக்கு? வேண்டாத வேலைதானே!

O O O

**நாட்டின் அழகு**

வயல்கள், காடுகள், ஆறுகள் மலைகள், கட்டிடங்கள், தொழிற்சாலைகள் எல்லாம் ஒரு நாட்டுக்கு அழகையும் புகழையும் சேர்ப்பதாகும். ஆனால் ஒருநாட்டுக்கு அழகு என்பது, அந்தநாட்டு இளைஞர்களின் உடல் பலமும் வளமும் தான்.

O O O

**வீடும் தேகமும்**

மலைப்புறங்களில் வீடுகட்ட விரும்பினால் கெட்டியான தரையில்தான் கட்ட முடியும். பொத பொத வென்று போகிற மணற்பாங்கிலே வீடு கட்ட முடியாது. அதுபோலவே, வலிமையான தேகத்தினால் தான் வலிமையான காரியங்களையும் எளிதாகச் சாதிக்க முடியும். வாழ்க்கையில் நோயுள்ள உடம்புள்ளவர்களால் என்ன செய்ய முடியும்?

O O O

**அழகுக் கலை**

வேண்டாத முடியை தேவையில்லாத இடத்தில் மழித்துவிட்டு அழகு செய்து கொள்வதுபோல, உடம்பில் ஊறும் வேகக் காதலையும் சற்று விவேகமாக ஒதுக்கிவிட்டால் உடம்பையும் அழகாகப் பார்த்துக் கொள்ளலாம். ஒய்யாரமாகவும் வாழலாம்! யாரால் இதைச் செய்ய முடிகிறது?

O O O

**விளையாட்டின் விந்தை**

திட்ட வட்டமாக திட்டம் போட்டுக் கொண்டு போட்டிகளுக்குச் செல்பவரே, திறமாக விளையாட முடியும். தீர்மானமான வெற்றியைப் பெற முடியும். தோற்கும் பொழுதும் மரியாதை பெற்று தோற்கக் கூடும். கொட்ட மடித்துக் கொண்டு விளையாடச் செல்பவர்கள், அவமானப்பட்டுத் திறம் குலைந்து திரும்புவார்களே தவிர, கூட்டத்தினரின் பரிகாசத் துக்கும் ஆளவார்களேதவிர, வெற்றியை நினைத்துப் பார்க்கவே முடியாத நிலைக்கு ஆளாவார்கள். அது தான் விளையாட்டுத் துறையின் விந்தையான ஆட்சியாகும்.

O O O

**நமக்கு ஒரு முன்னோடி**

அவசர நேரத்தில் நிதானமாகவும், ஆத்திரப் படும் இடத்தில் அமைதியாகவும், தோல்வி கண்ட சமயத்தில் சிந்தனை செய்தும் வெற்றி கண்ட போது வாய் ஜம்பம் அடிக்காமலும், வாய் சுவை தான் வாழ்வென்று கருதாமலும், உழைப்பில் சுவை கண்டு உழைத்தவர்கள் தான் வாழ்க்கையில் உயர்ந்திருக்கின்றார்கள். நாமும் ஏன் முயலக் கூடாது!

O O O

**லாரி மாறினால்...**

லாரியைப் பார்க்கிறோம். எல்லா வாகனங் களையும் விட மிகப் பயனுள்ள எந்திரம் அது.

காடு, மேடு, பள்ளம், சகதி, தண்ணீர் என்று எந்த பாதையையும் அது விட்டு வைப்பதில்லை. தயங்கிக்கொண்டு போகாமல் இருப்பதில்லை. இரவு பகல் பாராது. இடம் காலம் இல்லாது உழைக்கின்ற லாரி போல், உடலும் மனமும் நமக்கு வேண்டும். அதுதான் ஒப்பற்ற வாழ்க்கையாகும். ஆனால் அதி வேகமும் அற்பத்தனமான வேகமும் கொண்டு அடிக்கடி கவிழ்ந்து போகின்ற லாரிகளாக நாம் போய்விடக் கூடாது. கச்சிதமான உழைப்பு, கட்டுப் பாடான வேகம்—கலங்காத மனோதிடம்—கவலைப்படாத செயலாற்றல் இப்படித்தான் நாம் வாழ முயல வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு இறைவனின் பரிபூரண ஆசிகளும் எப்பொழுதும் தொடர்ந்து வர்து நிலைத்து, வாழ்த்திக் கொண்டே வரும்.

o o o

**வலிமையே வாழ்வு**

நேரம் காலம் பாராமல் உழைப்பவர்களால் தான், நேர்மையாக வாழ முடியும். ஏனென்றால். அவர்களுக்கு 'உழைப்பு உயர்த்தும்' என்ற நம்பிக்கை இருக்கிறது. அதிகமான உழைப்பு உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது. ஆனந்தமான உறக்கத்தைக் கொடுக்கிறது. நல்ல வலிமையைக் கொடுக்கிறது. வலிமையின் துணையால் வாழ்வில் உயரமுடியும் என்று நம்புகிற எவனும் வழி மாறிப் போக மாட்டான். இதுதான்

உண்மையாகவே வலிமையான தேகத்தைக் கொண்டிருக்கும் மனிதனுடைய இலக்கணமாகும்.

O O O

**யோசிக்கும் காலம்**

'தன்னைப் போல் பிறரையும் நேசி' என்றார்கள் பெரியோர்கள். தன்னையே நேசிக்கிறவர்கள் தான் தட புடலாக வாழ்கின்றார்கள். தன்னைப் போல் பிறரையும் நேசிக்கின்றவர்களோ தரம் தாழ்ந்து இருக்கின்றார்களே! நேசிப்பதைப் பற்றியே யோசிக்க வேண்டிய காலமாக அல்லவா போய்விட்டது.

O O O

**சிரமமான சுலபம்**

ஒருவருக்குத்தெரிந்ததை அறிந்து பாராட்டுவது தான் மனிதனுக்கு அழகு. தெரியாததை சுட்டிக் காட்டி, திறமையற்றவர் என்றும், ஒன்றுக்கும் உதவாதவர் என்றும் ஒருவர் மனதை ஏன் புண் படுத்த வேண்டும்? அவர் முயற்சியை ஏன் முனை முறிக்க வேண்டும்?

நல்லவர்க்கு அழகு பிறரை பாராட்டுவதும், பாராட்டுப் பெறுவதும் தான். பிறரை முன்னேற வைப்பதும், தான் முன்னேறுவதும் தான்.

O O O

### பாவத்தின் மூலம்

கடவுளுக்கு உண்மையாகப் பயப்படுகிறவன் தான் நீதிமானாகவும் நியாயஸ்தனாகவும் இருக்கிறான். கடவுளிடம் பக்தி இருப்பதாக வெளிப்படையாகக் காட்டிக் கொள்கிறவன் மறைமுகமாக அதிகப் பாவங்களைச் செய்து நிறைய அநீதிகளைச் செய்கிறான்.

O O O

### ஜாடிக்கேற்ற மூடி

படிப்புக்கேற்ற வேலையே கிடைக்க வேண்டுமென்று காத்துக் கொண்டிருப்பவன் பைத்தியக்காரன். அவன் எந்த ஜென்மத்திலும் முன்னுக்கு வரவும் முடியாது. நிம்மதியாக வாழவும் முடியாது. கிடைத்த வேலைக்கேற்ப படித்துக் கொண்டு, தன்னை பக்குவப்படுத்தி முயற்சியுடன் வேலை செய்கிறவனே புத்திசாலி! அவனே பிறர் போற்ற முன்னுக்கு வருவான்.

O O O

### மனிதன் எந்த வகை மிருகம்?

ஏற்கெனவே பெற்றதற்காகவும் இனிமேல் பெறப் போவதற்காகவும் வாலை ஆட்டுகின்ற நாய்—நன்றியுள்ள மிருகம்தான். எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு கொடுத்தவனையே ஏறி மிதிக்கின்ற ஒருவனை எந்த மிருகத்தில் சேர்ப்பது?

O O O

**நமக்கும் மேலே!**

பிறர் பொருளை எப்பொழுது எடுத்துக்கொண்டு விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறவன், கடைசியில் தன் பொருளையும் இழந்து, ஏமாந்து தான் போகிறான். முன்னேற்றத்திற்குப் பதிலாக முடிவில் அவமானமே கிடைக்கிறது.

O O O

**வல்லமையுள்ள மனம்**

வசதியும் வாய்ப்பும் உள்ள சூழ்நிலையில், தேகத்தைக் கெடுக்கின்ற தவறுகள் எனத் தெரிந்து கொண்டு செய்யாமல் தவிர்த்து விடுவது என்பது சாதாரணமான காரியமல்ல. அதற்கு மிகவும் வல்லமையுள்ள வலிமையான மனம் வேண்டும்.

O O O

**மனசாட்சி தெய்வம்**

மனிதனுக்குப் பயப்படுபவன் மனிதனல்ல.
மனசாட்சிக்கு பயப்படுபவனே மனிதன்.

O O O

**ஒப்பற்ற உலகம்**

உலகம் என்பது என் கோயில்
செய்யும் தொழிலே என் தெய்வம்
உழைப்பு என்பது என் வேதம்
உதவுதல் என்பது என் கொள்கை
கடமைஎன்பது என் குருநாதர்

இதைத்தான் எல்லா மதங்களும் தத்துவங்களும் சொல்லுகின்றன.

O O O

**திட்டமில்லையென்றால்?**

அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடாது நேரத்தை வீணாக்குபவர், தன்னையே தானே கெடுத்துக் கொள்பவராகிறார். அவரைக் கெடுக்க வேறுயாருமே வேண்டாம்! நுனிக் கிளையிலிருந்தவாறு அடிக்கிளையை வெட்டுபவர் நிலைதான் அவருக்கு கடைசியில் வரும்.

O O O

**படைப்பின் ரகசியம்**

இயற்கையின் படைப்பும் ரகசியமும் இப்படித் தானோ? ஒரு உடலில் முளைக்கின்ற முடி எல்லாம் ஒரே மாதிரியாக இருந்தாலும், இடத்திற்கேற்ப எப்படியெல்லாம் பெயர் பெற்றுக் கொள்கிறது. எப்படி ஏற்கப்படுகிறது, விரும்பப் படுகிறது வெறுக்கப் படுகிறது.

பிறக்கும் இடத்தாலா அல்லது இருக்கும் சிறப்பாலா ஒருவர் மதிப்பு பெறுகிறார்? புதிராக அல்லவா இருக்கிறது!

o o o

**வாக்கிங் புகழ்**

புகழ் என்பது நாயுடன் வாக்கிங் போவது போல, அதை சங்கிலி போட்டுக் கட்டிக் கொண்டு, விடாப்பிடியாக இழுத்துக் கொண்டு, சங்கடப் பட்டபடி நடப்பது வாக்கிங் அல்ல. அது பிறரது ஏளனத்துக்கு ஆளாக்கி விடும்! அழைக்காமலேயே கூடவே ஓடி வருகின்ற நாய்க்குட்டியைப் போல, நிலையான புகழ் வர வேண்டும். அது தான் நிம்மதியான வாக்கிங் என்கிற நிலையான புகழ்.

o o o

**அதிக துன்பம் எப்போது?**

அளவாகப் பேசி வளமாக வாழ்வது தான் அறிவுடையோர் பண்பாடு. ஏனெனில், அதிகமாகப் பேசினால் அதுவே துன்பமாகி விடுகிறது.

o o o

**சோதனையும் வேதனையும்**

மனிதர்களுக்குக் கொஞ்சமாவது சோதனைகளும், வேதனைகளும் இருக்கப் போய்தான் இந்த அளவுக்காவது மனிதத் தன்மையோடும் மனிதாபிமானத் தோடும் உலவுகின்றார்கள். இல்லையேல்,

மனதிலே அரக்கர்களாகவும், செயலிலே விலங்கு களாகவும் அல்லவா மாறிப் போய் விடுவார்கள். எத்தனை எத்தனை வழிகளில் மடக்கப் பட்டிருக் கின்றார்கள் இந்த மனிதர்கள் என்பது இப்பொழு தல்லவா புரிகின்றது!

O O O

**இறைவனின் தந்திரம்**

எலிக்கு எத்தனையோ வளைகள். ஏமாற்று வோர்க்கு எத்தனையோ வழிகள். வளைகள் பல இருந்தாலும், வளைக்கு வெளியே எளிதாக எலி மாட்டிக்கொள்வது போல,வழிகள் பல இருந்தாலும், ஏமாற்றுபவர்கள் எளிதாக ஏமாந்து மாட்டிக் கொள் கிறார்கள். அதுதான் இறைவனின் தந்திரமான ஆட்சி முறையாகும்.

O O O

**மணக்கும் உலகம்**

யாரிடம் போனாலும் அழகைக் காட்டி மணத்தைக் கொடுத்து அவர்களை மகிழ்ச்சி யடையச் செய்கிறதே மலர்—அது போலவே ஒவ் வொரு மனிதனின் சொல்லும் செயலும் இருக்க வேண்டும். இருந்தால் உலகமே மணக்காதா?

O O O

**சமாளிக்கும் கலை**

ஒவ்வொருவர் உள்ளத்திலும் எத்தனை எத்தனை கவலைகள், குழப்பங்கள், ஆசைகள்,

தோல்விகள், ஏமாற்றங்கள் நிறைந்தும் உறைந்தும் கிடக்கின்றன. குமுறி எழுகின்ற எரிமலை மேலே ஒன்றும் நடவாதது போல குந்தி இருக்கின்ற சாமார்த்திய சாலிகளைப் போலத் தான், சமுதாயத் திற்குப் பயந்து கொண்டு, சூழ்நிலையை சமாளித் துக் கொண்டு, எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பது போல நடமாடுகின்றார்கள் மனிதர்கள்.

இவற்றை வெற்றிகரமாக சமாளிப்பவர்கள் விவேகிகளாக ஆகி விடுகின்றார்கள். சமாளிக்க முடியாமல் வாய் விட்டு உளறி விடுபவர்கள் சாதாரணமானவர்களாகி விடுகின்றார்கள் அதை யும் மீறி வெளிப்படையாக செயல்படுத்தி விடுபவர் களே குற்றவாளியாகி விடுகின்றார்கள்.

G O O

### அறிஞனுக்குரிய ஆற்றல்

ஒரு உணவுப் பொருளைப்பார்த்ததும் உற்சாகத் துடன் கொப்பளித்து ஊறி எழும் உமிழ் நீர் போல, ஒன்றைப் பார்த்ததும் பொங்கி வருகின்ற கற்பனை களையும் கருத்துக்களையும் வளர்த்துக் கொண்டிருக் கின்ற ஓர் அறிஞனால் தான், சிறந்த படைப்புக் களைப் படைக்க முடியும். உயர்ந்த நூல்களையும் எழுத முடியும்.

O O O

### நெருப்பு மலை

பிறரை மகிழ்ச்சிப்படுத்துகின்றவரால் தான், தானும் மகிழ்ச்சியாக வாழமுடியும். பிறரை எரிச்சல் ஊட்டிவிட்டு இன்பம் அனுபவிப்பது என்பது, நெருப்பின் மேல் உட்கார்ந்து கொண்டு குளிர் காய்பவன் நிலையில் தான் அமையும்.

O O O

### தாய்ப் பண்பு

குழந்தை தூங்கும் பொழுது தான் தூங்கிக் கொண்டு, குழந்தை விழித்துக் கொண்டவுடன் தானும் விழித்துக் கொண்டு காரியம் செய்து சாதித்துக் கொள்கிற ஒரு தாயைப் போல; தான் கொண்ட நோக்கத்திற்காக இலட்சியத்திற்காக சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுத்து வாய்ப்புள்ள போது காரியம் ஆற்றிச் சமாளிக்கின்ற வர்களே லட்சிய வாதிகளாகின்றார்கள். வாழ்க்கை யில் உயர்கின்றார்கள். பிறர் போற்ற வாழ் கின்றார்கள்.

O O O

### இனிமையும் தனிமையும்

இனிமைப் படுத்தாத சூழ்நிலைகள் தான் ஒருவனை தனிமைப்படுத்தி விடுகின்றன. கனிவைக் கொடுக்காத சூழ்நிலைகள் தான் ஒருவனுக்கு துணிவைக் கொடுக்கின்றன.

O O O

**சிறந்த மனிதர்**

வகிக்கின்ற பதவியால் மரியாதை பெறுகிறவன் சாதாரண மனிதன். பதவியினைக் கொண்டு சிறப்பான காரியங்கள் செய்து, பதவிக்கு பெருமை ஊட்டுகின்றவனே சிறந்த மனிதன்.

O O O

**விசாலமான மனம்**

பிறரது திறமையைப் புரிந்து கொண்டு பாராட்டுவது என்பது பெரிய விஷயம். அதற்காக அவர் மிகவும் திறமையான செயல்காரராக இருக்க வேண்டுமென்பதில்லை. அவருக்கு விசாலமான மனதுதான் வேண்டும். அதுவும் பண்பட்ட மனமாகத்தான் இருக்க முடியும்.

O O O

**உத்தமப் பண்பு**

எதையும் எதிர்பார்த்துக் கொண்டு ஒருவரை ஒருவர் புகழ்வது என்பது இப்பொழுது எல்லாம் சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. சிறு உதவியைக் கூட எதிர்பார்க்காமல் ஒருவரது அரிய பண்பினை அறிந்து பாராட்டுபவர் தான் உத்தமமான மனிதர் என்று மதிக்கப் படுவார்கள்.

O O O

**இறைவன் தரும் பரிசு**

ஏதாவது ஒரு துறையில் விடுபடாத விருப்பத் துடன் முயற்சியை விட்டுவிடாமல், வெற்றியோ தோல்வியோ எதையும் பாராமல், தொடர்ந்து வேலை செய்து கொண்டே வந்தால்—ஒருநாள் நாம் எதிர்பார்த்த—எதிர்பார்க்கின்ற—எல்லா புகழும்—எல்லா வருமானமும் வந்துதான் தீரும்.

அதுதான் இறைவனின் இனிய பரிசு முறையாகும். அந்தப் பரிசு தப்பாமல் வந்து சேரும். இந்த எதிர்பார்ப்புடனே உழைக்கலாம். வெற்றி நிச்சயம்.

O O O

**தூக்கம் கெடுவது ஏன்?**

பிறரை மகிழ்விக்க முயல்பவர்கள் தான் மகிழ்ச் சியாக வாழ்கிறார்கள். பிறரைப் பார்த்துப் பொறாமைப் படுபவரும் பிறரைத் துன்புறுத்த விழை பவரும்—மாறாத் துன்பத்தையும் தூக்க மின்மையையும் தான் துணையாகக் கொள் கின்றார்கள்.

O O O

**புகழை வளர்த்துக் கொள்ளுங்கள்**

எல்லோருக்கும் தெரிந்தவராக புகழ் உள்ள வராக எப்படியாவது வந்து விடுவது என்பது எல்லோராலும் முடிந்ததே.

ஆனால், வந்த புகழ்நிலையை விட்டுக்கீழே இறங்கிவிடாமல் காத்துக் கொண்டிருப்பது, மிகவும் கஷ்டமான காரியமாகும். அப்படிச் செய்பவர் சாமர்த்திய சாலிகளாவார்.

வந்த புகழ் இறங்காமலும், மென்மேலும் பெருகிட வழிவகைகளை வாய்ப்புக்களை ஏற் படுத்திக் கொண்டு இறுதிவரை முன்னேறிக் கொண்டிருப்பவரே அறிவாளர் — அறிஞர்கள் ஆவார்கள்.

O O O

**பிரச்சினைகள் பெரிது அல்ல!**

பிரச்சினைகளே பெரிதென்று எண்ணி எண்ணி, அவற்றையே பேசிப் பேசி, அவற்றிற் குள்ளே புதையுண்டு போகின்றவர்களே அதிகமாய் இருக்கின்றார்கள். ஆனால், பிரச்சினைகளைவிட்டு மேலேறிவந்து, முனைந்து பலகாரியங்களைச் செய் கின்றவர்களே முன்னுக்கு வருகின்றார்கள். சாதனை செய்து சரித்திரப் புகழினை அடை கின்றார்கள்.

O O O

**மொட்டை...... மனிதர்**

வெட்ட வெட்டத்தழைப்பது மரத்தின் இயல்பு. வீழவீழ முயற்சிப்பதுதான் மனிதனின் இயல்பு.

வெட்டியபிறகு தழைக்காத மரத்திற்கு மொட்டை மரம் என்று பெயர். வீழ்ந்த பிறகு முயற்சிக்காத மனிதனுக்கு என்ன பெயர்—? உங்கள் விருப்பம் போல் நீங்களே பெயர் கொடுங்கள் அதுவே பொருத்தமாக இருக்கும்.

o o o

**இயற்கையின் ரகசியம்**

தலையிலே முடிகள் உதிர்கின்ற போது முகத்திலே முடி அதிகமாக, மேலும் அதிவேகமாக முளைக்கின்றதே! ஏன்? வயது அதிகமாக ஆக, கொஞ்சம் காதல் வேகமும் அதிகப் படியாக வருகிறதே! அது ஏன்?

o o o

**வளர்க்கும் புகழ்**

புகழ் என்பது போராடிப் பெறுவதல்ல. சதிபுரிந்து கவர்ந்து கொள்வதல்ல. புகழ் என்பது ஊடுருவல் போன்றது. பிறர் கண்களுக்கு எரிச்சல் இல்லாமல், எண்ணங்களுக்குப் பொறாமை தராமல், எதிரிகளை உருவாக்கிக் கொள்ளாமல் இலாவகமாகப் பெறுகின்ற புகழ்தான் சிறந்த புகழாகும். அதுவே வளரும் புகழாகும். வளர்க்கும் புகழும் ஆகும்.

o o o

**இஸ்திரிப் பெட்டியின் இதம்**

இஸ்திரிப் பெட்டியில் அதிக சூடு இருந்தாலும் துணி பாழாகிவிடும். சூடே இல்லாமல் போனால், துணி பணியாமல் போய் பலனில்லாமல் ஆகிவிடும். ஆகவே, சலவைத் தொழிலாளி ஒருவர் பக்குவமான சூட்டுடன் பதமாக வைத்துக் கொண்டு வேலை செய்வதைப் போல, எந்தப் பிரச்சினையை அணுகினாலும் சுறுசுறுப்புடன் அதே சமயத்தில் பரபரப்பு இன்றி அணுக வேண்டும். சுறுசுறுப்பு இல்லாத சோம்பல் தன்மையும் படபடத்துப் போகின்றபதட்டமும் பிரச்சினையை தவிர்ப்பதற்குப் பதிலாக திசை மாற்றி விடும்—அதிக மாக்கி விடும்.

o o o

**ஆத்ம திருப்தி**

ஒரு காரியத்தை செய்து முடிக்க முடியாது என்பதற்குக் காரணம் கூறுபவர்கள், கூற முயல்பவர்கள் சோம்பேறிகள். அவர்கள் என்றும் இருந்த நிலையிலேயே இருந்து போவார்களே ஒழிய முன்னணிக்கு வரவே மாட்டார்கள். ஒருகாரியத்தை முடியாவிட்டாலும் செய்ய முயலும் முயற்சிக்கு காரணங்களைக் கண்டு பிடிப்பவர்களும், முயற்சி செய்பவர்களுமே முன்னுக்கு வர முடியும். நாயை அடித்து விரட்டி வெற்றி பெறுவதை விட, யானையை அடக்க முயற்சித்துத் தோற்பதில் ஒன்றும் அவமானமில்லை. ஒருகாரியத்தை செய்ய முயன்று தயங்கித் தேங்கி நிற்பதைவிட, செய்ய

முடியாததற்காக முயற்சி செய்து தோற்பது கேவலமில்லை. வெற்றி வராவிட்டாலும் அனுபவமாவது கிடைக்கிறதே ஆத்ம திருப்தியாவது பெறுகிறோமே அதுவே போதும்.

O O O

**திருப்தி தரும் தரிசனம்**

எந்தக் காரியத்தையும் அந்தந்த நேரத்தில் முடித்து விடவேண்டும் என்று முனைபவருக்கும் உழைப்பவருக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். சில சமயங்களில் வெறுப்பே ஏற்படுகின்ற அளவுக்கு எரிச்சலாகக் கூடத் தெரியும். சிரமப்பட்டு அந்தக் காரியத்தை முடித்து விட்டால், அதற்குப் பிறகு ஏற்படுகின்ற இன்பமும் திருப்தியும் இருக்கிறதே அதை சொல்லி உணர முடியாது. அனுபவிக்கும் பொழுது தான் அதன் இன்பம் புரியும்.

O O O

**காலத்தின் கோலம்**

பிறரது வறுமையைப் பார்த்து விட்டு, தமது பெரிய உடைமையையும் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்து, நாம் நல்ல நிலையில் இருக்கிறோம் என்று திருப்தி அடைய வேண்டும் என்று நமது முன்னோர்கள் நமக்குக் கற்பித்துச் சென்றார்கள்.

பிறர் செய்கின்ற சிறிய தவறுகளுடன், தான் செய்கின்ற பெரிய தவறை ஒப்பிட்டுப் பார்த்து விட்டு, தான் இப்போது செய்வது பெரிய தவறல்ல. என்று தம் தவறுகளை நியாயப்படுத்திக் கொண்டு திருப்தி அடையவே நமது தலைவர்கள் மக்களுக்குக் கற்பித்துத் தருகின்றார்கள்.

'திருப்தி' எப்படியெல்லாம் மாறிவந்து உதவு கிறது பார்த்தீர்களா? இதைத்தான் காலத்தின் கோலம் என்கிறோம். வேறு எப்படி சொல்வது?

O O O

**பெயர்ப்பலகைப் புகழ்**

வண்ணச் சுவரொட்டிகளை, எத்தனை தான் அழகாக அருமையாக அச்சிட்டு, சுவர்களிலே ஒட்டினாலும் அடுத்து அதன் மேலே வேறு வகை யான வண்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்படு கின்றன. அதை யாரும் தடுக்கவும் முடியாது தவிர்க்கவும் முடியாது.

தனியாக, உயரமாக, அழகாக எழுதப்பட்டு கடைகளிலே வைக்கப்படுகின்ற பெயர்ப் பலகை இருக்கிறதே! அதற்கு ஒரு மதிப்பு உண்டு. அதில் போய் யாரும் மேலே ஒட்டவும் முடியாது. மறைக் கவும் முடியாது.

நமக்கு வருகின்ற புகழ், வீதிச் சுவற்றிலே ஒட்டப்படும் வண்ணச் சுவரொட்டி போல மினுக்கி உடனே மறைந்து போகக் கூடியதாக இருக்கக் கூடாது. கடையின் பெயர்ப் பலகை போல தனி யான புகழ் உடையதாக இருக்க வேண்டும்.

O O O

**நிலைமைகளும் நினைப்பும்**

நிலைமைகளை அனுசரித்து அதற்கேற்றபடி நடந்து கொள்ளத் தெரிந்தவர்களே நீடித்த இன்பத்தைப் பெற முடியும். நிலையாக அதே உணர்வுடன் வாழ்வைத் தொடர முடியும். தண்ணீரைப் பாருங்கள். கோடைகாலத்தில் ஆவியாகிக் கொள் கிறது. குளிர்காலத்தில் கட்டியாக மாறிக் கொள் கிறது. இடைப்பட்ட காலத்தில் நீராக ஓடிக் கொண்டிருக்கிறது. வசதி இருக்கின்ற காலத்தில் ஆவியாகப் பறந்து விடுகிறது. உதவி, இல்லாத நாட்களில், ஐஸ் கட்டியாக இருந்து தன் மதிப்பைக் கட்டிக் காத்து, இயல்பான காலத்தில் நீராக எல்லோருக்கும் உதவுகின்ற இதயத்தைக் கொண்டு வாழ்ந்தால், அதுதான் இன்பம். அந்த வாழ்க்கை தான் சொர்க்கமான வாழ்க்கை...

O O O

**பதவியும் உதவியும்**

பதவியைக் காட்டி உதவி செய்வதற்காகப் பணம் பெற்றுக் கொள்ளும் செயலானது தனது அழகைக் காட்டிப் பணம் வாங்கிக் கொள்ளும் பரத்தையரை விட கீழ்மையானதாகும். இந்த 'கீழ்மை'தான் இன்றுமேன்மையானதாகப் பாவிக்கப் படுகிறது. பாதுகாக்கப்படுகிறது. பேரளவிலே பின்பற்றப்படுகிறது. பெருமைக்குரியதாகவும் மதிக்கப் படுகிறது.

o o o

**பக்தி என்றால்**

ஆண்டவனிடம் எனக்கு அதைக் கொடு, இதைக் கொடு என்று கேட்பது பக்தியல்ல. 'நான் உனக்குப் பூஜை செய்கிறேன். விரதம் இருக்கிறேன். எனக்கு பொருள் கொடு' என்று கேட்பது பேரம். ஒரு வியாபாரம். வந்ததற்காக, எதுவாக இருந் தாலும் நமக்குக் கிடைத்ததற்காக ஆண்டவனிடம் நன்றி சொல்கிறோமே; அதுதான் உண்மை பக்தி யாகும்.

o o o

**இலைகளும் தலைகளும்**

மரம் செடி கொடிகளில் உள்ள இலைகளைப் பார்க்கிறோம். நிறத்தால், வடிவத்தால் அவை

மாற்றம் பெற்றிருக்கின்றன. அது போலவே சுவைகளிலும் பயன்களிலும் மாறிமாறியே இருக்கின்றன. ஒரு இலை கசக்கிறது. ஒரு இலை புளிக்கிறது. ஒரு இலை துவக்கிறது. ஒவ்வொன்றிலும் சொல்ல முடியாத அளவுக்கு என்னென்னவோ சுவைகள். மணத்திலும் குணத்திலும் மாற்றங்கள் இருப்பது போலவே மனிதர்களிலும் இருக்கத்தான் இருக்கின்றார்கள். பயனுள்ள இலைகளைத் தெரிந்து, பயனுள்ள முறைகளில் பயன்படுத்தத் தெரிந்தால் பயன்கள் நிறையவே கிடைக்கும். அதுபோலவே, மனிதர்களையும் புரிந்து கொண்டு செயல்படுகின்றவர்களே சந்தோஷமாக வாழ்ந்து பயன் துய்க்க முடியும்.

o o o

**இரண்டும் இரண்டுதான்... ஒன்றல்ல**

உன்னளவில் நீ சந்தோஷம் அடைய வேண்டுமென்றால் நீ உலகைப்பற்றியோ உறவைப் பற்றியோ கவலைப்படக் கூடாது. சிந்திக்கவும் கூடாது. உற்றவர்கள் மற்றவர்கள் உன்னை சுற்றியிருப்பவர்கள் சந்தோஷம் பெற நீ உதவி வாழ விரும்பினால், உன்னைப் பற்றியும் உன் குடும்பத்தைப் பற்றியும் கவலைப் படக் கூடாது. சிந்திக்கவும் கூடாது. ஏனென்றால் இரண்டும் இரு துருவங்கள். இரண்டும் இரண்டுதான்... ஒன்றல்ல.

o o o

**கோட்சே புகழ்**

இந்த உலகத்தில் தோன்றியவர்கள் அனைவரின் குறிக்கோளுமே புகழுடன் வாழ வேண்டும் என்பது தான். இப்படிப் 'புகழ்' பெறுவதில் இரண்டு வகை இருக்கிறது.

காலமெல்லாம் கஷ்டப்பட்டுப் பட்டு, கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்த காந்தி புகழ். ஒரே நொடியில் காந்தியை சுட்டுக் கொன்று விட்டு உலகமெங்கும் தன்னைத் தெரிய வைத்துக் கொண்ட கோட்சே புகழ் இப்பொழுது தம்மை வெளிப்படுத்திக் காட்ட முயல்கின்ற கோட்சே நோக்கமும் கோட்சே செயல்களும் தான் மக்களிடையே நிறைந்து வருகிறது. என்ன செய்வது? இதுதான் காலத்தின் கஷ்டம்.

o o o

**பிறவி ஞானம்**

மக்களிலிருந்து ஒருவனை மேம்படுத்திக் காட்டுவது அறிவு, அறிவின் முதிர்ச்சியே ஞானம் என்பார்கள். ஞானத்தில் பல வகை உண்டு. அது பார்வை ஞானம், கேள்வி ஞானம், படிப்பு ஞானம், அனுபவ ஞானம், இந்த ஞானங்கள் தாம் ஒருவனை மேதையாக்குகிறது. மேன்மைப்படுத்து கிறது. இத்தனை ஞானங்களையும் ஆட்டுவிக்கும் ஒன்றிருக்கிறது. அதுதான் பிறவி ஞானம்! பிறவி ஞானம் தான் அறிய முடியாத ரகசியமாக அதிசய

மாக எல்லோர்க்கும் தெரிகிறது! அதைப் புரிந்து கொள்ளவும் பிறவி ஞானம்தான் தேவைப்படுகிறது.

o o o

**உழைப்புத் துடுப்பு**

தோணிக்குத் துடுப்பு போல, மனிதனுக்கு உழைப்பு அவசியம்.

o o o

**இதுதான் உலகம்**

பிறருடைய சௌகரியத்தைக் காப்பாற்று வதற்காக, நாம் அனுசரணையாக நடந்து கொள்கிற வரையில் நமக்கு மரியாதை கிடைக்கிறது. நமது காரியம் நடக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்து கிறவர்கள், தங்கள் சௌகரியம் குறையும்பொழுது கொள்கின்ற கோபம் இருக்கிறதே அதை அனுபவிக் கும் பொழுது தான் உணர முடியும். சுயநலத் தாண்டவம் தான் இன்று மனிதர்களிடையே தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது.

o o o

**ஆட்டுக்கு வால்**

'மற்றவர்கள் எப்படிப் போனால் எனக்கென்ன? என் வரைக்கும் சரியாக இருந்தால் சரி' என்று

நினைக்கிறவர்களே சமுதாயத்தில் அதிகம்பேர் இருக்கின்றார்கள். இப்படி நினைத்து வாழ்பவர்கள் மட்டும் நிம்மதியாக வாழ்கிறார்களா என்ன? இல்லையே! 'ஆட்டுக்கு வாலை ஆண்டவன் அளந்துதான் வைத்திருக்கிறான்' என்ற பழமொழி எவ்வளவு உண்மையான மொழி!

o o o

பணம் தரும் பரிசு

ஏதோ கொஞ்சம் சம்பாதிக்கும் ஏழைகள், வந்த பணத்தையெல்லாம் வாய் ருசியான உணவுக்கும் விரும்பியவாறு உடைக்கும் மீதியை உல்லாசத்திற்கும் செலவு செய்து விட்டு ஜாலியாக வாழ்ந்து விடுகின்றார்கள். பணம் இல்லாத போதுதான் அவர்களுக்குக் கவலையே தவிர, மற்ற நேரங்களில் எல்லாம் மகிழ்ச்சி தான். ஆனால் பணக்காரர்களுக்கோ எல்லாம் இருந்தும், எல்லா வசதிகளுக்கு வாய்ப்பிருந்தும் எல்லா நேரங்களிலும் சந்தோஷம் இல்லாமல் இருக்கிறார்கள் என்றால் கவலையாக அல்லவா இருக்கிறது! எல்லாம் பணம் தரும் பரிசு. நெஞ்சிலே உள்ள நிம்மதியை நீக்கிவிட்டு பணம் நெஞ்சிலே அமர்ந்து கொண்டு ஆட்டிப்படைக்கிறது அதுதான் பணம் தரும் பரிசு போலும்.

o o o

**இரண்டாந்தர நியாயம்**

கணவன் தவறு செய்வதை சகித்துக் கொள்கின்ற மனைவிக்கு கற்புடையவள் என்று பாராட்டு. ஆனால், மனைவி செய்கின்ற தவறை சகித்துக் கொள்கின்ற ஒருகணவனுக்கு கையாலா காதவன் என்று இழிவான குற்றச்சாட்டு. ஏன் இந்த இரண்டாந்தர நியாயம்?

o o o

**சூடான துன்பம்**

அடுப்பிலே வைத்த குடத்திலே இருக்கும் நீர் சூடாகும் பொழுது, மேலும் கீழுமாகப் போய் வந்து பறந்தபடி சூடாவதை நாம் பார்க்கிறோம். அது போலவே சமுதாய அடுப்பிலே, சூழ்நிலை தீயெழுப்ப, துன்பம் எனும் சூடு ஏற ஏற, மனிதர்கள் எனும் நீர் சுற்றுப்புறம் எங்கும் சென்று, துடித்துப் பெறும் அனுபவங்களில் பக்குவமாகிக் கொள் கின்றனர். வாழ்க்கையில் மனிதர்களின் இடைவிடாத செயல்களும் இயக்கமும் இப்படித் தான் தொடங்கி தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இல்லையேல், மனிதர்கள் படுத்துக்கிடந்தே வாழ்ந்து தங்கள் வாழ்வை முடித்து விடுவார்களே!

o o o

### மனிதர்கள் பிரச்சினைகள்

மனிதர்கள் என்பவர்களுக்கு பிரச்சினைகள் என்று மற்றொரு பெயர் வைத்து விடலாம் போலிருக்கிறது. யாரைப் பார்த்தாலும் எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றி கவலையாகவோ அல்லது காரசாரமாகவோ தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள் பிரச்சினைகள் தான் வாழ்வை வளமாக்கிக் கொண்டிருக்கின்றனவோ என்னவோ! ஆகவே பிரச்சினைகள் தான் மனிதனை உருவாக்குகின்றன. உபயோகமுள்ளவர்களாக மாற்றுகின்றன என்று நாம் நம்பினாலும், அது நியாயமுள்ளதாகவே இருக்கும் என்று நாம் நம்பலாம்.

o o o

### பெண்களும் உறவும்

பெண்கள் உறவில் ஆனந்தம் கிடைக்கலாம். ஆனால் அமைதி கிடைக்காது.

o o o

### அறிவுத் திமிர்

படிக்கப் படிக்க வளர வேண்டியது அறிவுதான். திமிரல்ல.

o o o

**மதமான மனம்**

மக்களிடையே மதம் வளர்வதற்குக் கூட மனம் இங்கு தேவையில்லை. பணம் தான் தேவைப் படுகிறது.

பணத்தால் மனம் கிடைக்கிறது. அதன் தொடர்பாக மதம் கிடைக்கிறது. அதோடு 'மதமும்' கிடைக்கிறது. மதம் பிடித்தவர்களை மாற்றவா முடியும்.

o o o

**இரண்டு கால் மிருகம்**

இலட்சியம் இல்லாத மனிதர் இரண்டு கால் மிருகமாவார்.

o o o

**கலி காலம்**

நியாயத்தைத் தவறுபடுத்திக் காட்டவும் தவறினை நியாயப்படுத்தியும் பேசுகின்ற வல்லமை மிக்கவர்கள் வாழும் காலமே கலிகாலமாகும்.

o o o

**எருமைத்தனம்**

பணச்சேற்றில் மன எருமை படுத்துக் கொண்டு வர மாட்டேன் என்கிறது அறிவு எஜமானன்

அதட்டினாலும் பணக் குறும்பு எனும் சேற்றை வாலால் வீசி விரட்டி விடுகிறது. தர்மம் என்று பொதுமக்கள் ஒதுங்கிப் போகின்றார்கள் — எருமை எழுந்து வருவது எப்பொழுது? அதன் பாலைக் கறந்து பயன் பெறுவது எப்போது?

o o o

**பாவம் என்பதற்குப் பரிசு பரிதாபம்**

பச்சைக் கொடிகள் மண்ணில் கிடக்கின்றனவே என்று பாவம் பார்த்து தன் மீது படரட்டுமே, நன்றாக வளரட்டுமே என்ற நல்ல நினைவுடன் பக்கத்திலே வளர்ந்து நின்ற முருங்கை மரம் அனுமதியளித்தது. அவரைக் கொடியும் படர்ந்து கொண்டது.

சில நாட்கள் கழித்து, மரத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டது கொடி. நிமிர்ந்து நின்ற மரம் வளைந்து கொண்டது. வளைய வளையக் குனிந்த மரமோ இலைகளை இழந்தன கிளைகளை இழந்தன.

இன்னும் சில நாட்கள் போன பிறகு, செடியும் காய்ந்தது. மரமும் சாய்ந்து போனது.

இப்படித்தான் பாவம் பார்க்கப் போய் பட்டுப் போன முருங்கை மரமாய் நின்ற நிலையை

நினைத்துப் பார்க்கிறேன். நல்ல வேளை பிழைத்துக் கொண்டேன் என்று பெருமூச்சு விடுகிறேன். இப்படி எத்தனையோ கொடி மனிதர்கள் இருக்கையில், மரமனிதர்கள் என்ன செய்வார்கள்? மாட்டிக் கொண்டவர்களை மீட்டுக் கொண்டுவர இறைவன் தான் உதவ வேண்டும் வேறு வழி!

o o o

**காய்க்காத தோட்டம்**

கர்வமும்பொறாமையும் நிறைந்தவர்கள் வாழ்வு எப்படி ஆகிறது தெரியுமா? நிறைய பூத்துப் பூத்து! காய்க்கின்ற காலத்தில் உதிர்ந்து போகின்ற காய்க்காத தோட்டமாக ஆகிவிடுகிறது.

o o o

**வேஷம்**

நடைபாதைகள்தோறும் கோயில்கள். காண்ப வர்கள் எல்லோரும் கையெடுத்து வணங்குகிறார்கள் நாட்டில் பக்தி அதிகமாகிவிட்டது என்று பார்த் தால்... எல்லாம் பகல் வேஷமாக இருக்கிறதே. எதற்கு பக்தி என்பதே புரியவில்லை...பணத்தையே தேடும் வேஷப்பக்தி... எப்படி அசைந்தாலும் எருமை யானையாகி விடுவதில்லை. பிறர் முன்னே பக்தி வேஷம் பெருமை தருவதாகவும் இல்லை.

o o o

**வறுமைக் கோடு**

வேலை செய்யும் வர்க்கம்—வேலை வாங்கும் வர்க்கம்—வேலை செய்யாமல் ஏய்த்துத் தூங்கும் வர்க்கம்—வேலை செய்யும் வர்க்கம் வேலை செய்ய கணக்குப் பார்க்கிறது. வேலை வாங்கும் வர்க்கம் கணக்கில் ஏய்க்கிறது—தூங்கும் வர்க்கமோ கணக்கையே விழுங்குகிறது—வறுமைக் கோடு நீண்டு கொண்டே போகாமல் என்ன செய்யும்?

o o o

**சோற்று வாழ்க்கை**

கண்முன்னே கைக்கெட்டும் தூரத்தில் பரிமாறப் பட்ட உணவு.

ஆசைவேகத்துடன் தின்பவர்கள் அலங்கோலக் காட்சி. அவசர அவசரமாக விழுங்குபவர்கள் அசிங்கமான காட்சி. நிதானமாய் சாப்பிடுவர்களுக்கு ரசனை—நேர்த்தி—உணவும் ஜீரணமாகும். உடலும் வலிவு பெறும். ஆசைப்படுவர்களும் அவசரப்படுவ வர்களும் தங்கள் வாழ்க்கையில் அடுத்தவர் முன் அலங்கோலமாகத்தான் தெரிகின்றார்கள்.

o o o

**அரசியல்**

அடுத்தவர்களைப் பற்றியே தாக்கிப் பேசிப் பேசி, அதில் தங்களுக்கு சகாயங்களையும், சாதகங்

களையும் எதிர்பார்த்து, ஆதாயம் தேடுகின்ற இடத்திற்குப் பெயர்தான் அரசியல் என்பதாகும்.

o o o

**உங்களின் எதிர்காலம்**

மற்றவர்களைப் பற்றியே குறைத்தும் பழித்தும் பேசுகின்ற பழக்கத்தை மாற்றிப் பாருங்கள். உங்களைப் பற்றி சிந்திக்க, நிறைய நேரம் கிடைக்கும். உங்கள் எதிர்காலமும் உயர்ந்து போகுமே!

o o o

**சிறுவர்கள் — பெரியவர்கள்**

சிறுவர்கள் ஒரு நாள் பெரியவர்கள் ஆகி விடுவார்கள். பெரியவர்கள் ஆனவர்கள் சிறுவர்களாக ஆகவே முடியாது. இதுதான் இயற்கையின் ஒரு வழிப் பயணம்.

இது புரியாமல் சிறுவர்கள் பெரியவர்கள் போல "பல" காரியங்களைச் செய்து, சீக்கிரமே சீரழிகின்றார்களே! இவர்களை யார் தான் திருத்த முடியும்? காலங்காலமாய் இந்த கண்றாவிக் கதை தான் தொடர்கிறது—

o o o

**பழி தீர்க்கும் ராஜ பாதை**

பணத்தால் பாவங்களை மறைத்து விடலாம். ஆனால் பாவங்களுக்குரிய தண்டனை வரும் பொழுது அந்த வழியை பணத்தால் மறைத்துவிட முடிவதில்லை. தடுத்திடவும் முடிவதில்லை. அந்த வழி ராஜபாதையாகவே இருக்கிறது. காரணம்? அது தான் தர்மத்தின் வழி!

o o o

உடற்பயிற்சித் துறையில் இருப்பவர்கள் தொந்தியும் தொப்பையுமாய் இருக்கிறார்களே என்று என்னை பலர் கேட்கின்றார்கள். உடற் பயிற்சி செய்தால் உடல் சீராக இருக்கும், நேராக இருக்கும் என்று ஊருக்கு உபதேசம் செய்கின்றவர்கள், தாங்கள் நேராக நிற்க வேண்டும் என்பது முறைதானே! வயிற்றை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் வெட்கப்பட வேண்டிய விஷயம் இது. ஏனெனில் தாங்கள் பணியாற்றும் துறையை பலவீனப்படுத்திக் கொண்டிருக்கின்றார்களே... அதற்காக!

o o o

**இறைவனின் புன்னகை**

வெற்றி என்பது உண்மையான உழைப்பின் விளைச்சல். உள்ளிருந்து ஊக்குவித்த இறைவனின் புன்னகை அது.

o o o

**பழி தீர்க்கும் ராஜ பாதை**

பணத்தால் பாவங்களை மறைத்து விடலாம். ஆனால் பாவங்களுக்குரிய தண்டனை வரும் பொழுது அந்த வழியை பணத்தால் மறைத்துவிட முடிவதில்லை. தடுத்திடவும் முடிவதில்லை. அந்த வழி ராஜபாதையாகவே இருக்கிறது. காரணம்? அது தான் தர்மத்தின் வழி!

O O O

உடற்பயிற்சித் துறையில் இருப்பவர்கள் தொந்தியும் தொப்பையுமாய் இருக்கிறார்களே என்று என்னை பலர் கேட்கின்றார்கள். உடற் பயிற்சி செய்தால் உடல் சீராக இருக்கும், நேராக இருக்கும் என்று ஊருக்கு உபதேசம் செய்கின்றவர்கள், தாங்கள் நேராக நிற்க வேண்டும் என்பது முறைதானே! வயிற்றை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் வெட்கப்பட வேண்டிய விஷயம் இது. ஏனெனில் தாங்கள் பணியாற்றும் துறையை பலவீனப்படுத்திக் கொண்டிருக்கின்றார்களே... அதற்காக!

O O O

**இறைவனின் புன்னகை**

வெற்றி என்பது உண்மையான உழைப்பின் விளைச்சல். உள்ளிருந்து ஊக்குவித்த இறைவனின் புன்னகை அது.

O O O

காலம்

எல்லாரும் மற்றவர்களுக்கு புத்திமதி சொல்ல விரும்புகிறார்கள். கேட்பது தான் யாரென்று தெரியவில்லை காலம் இப்படி மாறி வருகிறது!

O O O

புலம்பல்

பொழுது **போதவில்லையே** என்று உழைப்பவர்கள்தான் நோயில்லாமல் வாழ்கின்றார்கள். சந்தோஷமாக இருக்கின்றார்கள். பொழுது **போக வில்லையே** என்பவர்கள் வாழ்வு புலம்பலில் ஆரம்பித்து, கலங்கலில் வளர்ந்து, அலங்கோலமாய் முடிகிறது. வித்தியாசம் புரிகிறதல்லவா!

O O O

குருட்டு ஈ

ஒரு காரியத்தை ஆரம்பித்து செய்து கொண்டிருக்கும் பொழுது, விவரம் தெரியாமல் குறுக்கே விழுந்து கெடுத்துக் கொண்டிருப்பவர்களை நீங்கள் நிறையவே சந்தித்திருக்கக் கூடும். சங்கடப் பட்டிருக்கவும் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகவே நேர்ந்திருக்கலாம். இருட்டு நேரத்தில் கூட, மேலே மொய்க்கின்ற குருட்டு ஈ போன்றவர்கள் அவர்கள். விரட்டினால் போகாத அந்த ஈ அடிபட்டுத்தான் விழும் அதுபோலத்தான் மனித, இனத்தில் குருட்டு ஈக்கள் நிறைய இருக்கின்றன. இதனால் தான் கொலைகளும் சமுதாயத்தில் விழுகின்றனவோ!

O O O

### வீதிகளில் மேதாவிகள்

அதிக விலையுள்ள கார். ஆடம்பரமான கார். எப்படித்தான் செலவழித்து அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், செலவில்லாமல் நிறைத்துக் கொள்கின்ற காற்று, சக்கரத்தில் இல்லாமல் போனால் வண்டியே ஓடாது. படுத்து விடும். மனித காருக்கும் செலவில்லாத காற்று நிறையவே தேவைப்படுகிறது. சரியாக நிறைத்துக் கொள்ளாத மனிதக் கார்கள், படுத்துக் கிடக்கின்றன. இந்த விஷயத்தில் அறிவுறை தருவதற்குக் கூட ஆட்கள் குறைவாகத் தான் இருக்கின்றனர். ஓடித்திரியும் காற்றை உற்சாகமாகப் பயன்படுத்திக் கொண்டால் உல்லாசமாக வாழலாம் என்று தான் விளையாட்டுகள் கூறுகின்றன. வீதியிலே நின்று அழைக்கும் மேதாவிகளுக்கு மதிப்பு ஏது? விளையாட்டும் இந்த மரியாதையுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

o o o

### துக்கமும் தூக்கமும்

துக்கத்தை வளர்ப்பவர்கள், தூக்கத்தை இழக்கிறார்கள். தூக்கத்தை இழப்பவர்களும் துக்கத்தில் ஆழ்ந்து போகின்றார்கள். துக்கமும் தீரவேண்டும், தூக்கமும் நிறைய வேண்டும் என்றால், அதற்கு சிறந்த வழி மனப்பூர்வமாக விளையாட்டில் ஈடுபட வேண்டியதுதான். உழைப்புக்கு உழைப்பு. மகிழ்ச்சிக்கு மகிழ்ச்சி.

o o o

### வாழ்க்கை என்ற கடிகாரம்

வாழ்க்கை என்ற கடிகாரத்தில் நாட்கள் என்பது தான் நிமிட முட்கள். காலம் என்பது மணி காட்டும் முள். ஒருவரின் வாழ்க்கைக் கடிகாரம் அமைக்கும் பொழுதே, **இறப்பு** என்கிற அலாரத்தை அழகாக ஆண்டவன் 'செட் பண்ணி' வைத்து விடுகிறான். வருகிற அந்த நேரம் பார்த்து கடிகாரம் அலாரம் அடித்து முடித்து வைத்து விடுகிறது. அலாரத்தோடு கடிகாரமும் போய் விடுகிறது!

o o o

### எரியும் விளக்கு

எரியும் விளக்குக்குத்தான் மதிப்பும் மரியாதை யும் உண்டு. வாழ்த்துகின்றவர்களும் வணங்குகின்ற வர்களும் உண்டு. எரியாத விளக்கை வெளியே வீசி எறியத்தான் எல்லோரும் முயல்வார்கள். அதுபோல் தான் உடலும். உழைக்கும் உடலுக்குத்தான் மதிப்பு. மரியாதை, வாழ்த்து, வணக்கம் எல்லாமே கிடைக்கும். உழைக்காத உடலை, மற்றவர்கள் வெறுக்கும் முன்னரே, அந்த உடலே பிறர் நகைக்க நோய்ப்பாயில் படுத்துக் கொள்கிறதே! பிறகெப்படி கிடைக்கும் மதிப்பு? பேசிப் பார்க்கும் பொழுது புரியாத இந்த விஷயம், படுத்துக்கிடக்கும் பொழுது தான் புரிகிறது!

o o o

### ஆளில்லாத பல்லக்கு

ஊருக்கு உபதேசம் செய்யும் பொழுது உற்சாகமாகத் தான் இருக்கிறது. அதைக் கடைபிடிக்கும் பொழுது தான் கஷ்டமாக இருக்கிறது. கஷ்டத்தில் யார் கஷ்டப்படுவார் என்று தான், இப்பொழுது எல்லோரும் உற்சாகமான உபதேசத்தில் இறங்கி விட்டார்கள். இருக்கிற எல்லோருமே பல்லக்கில் ஏறிக்கொண்டு விட்டார்கள். பல்லக்குத் தூக்க ஆளில்லை. பல்லக்கு படுத்துக் கிடக்கிறது! பாவம்!

O O O

### ஆரோக்கியமான நட்பு

மனிதன் என்பவன் சிறந்த லட்சியங்களுடன் வாழ வேண்டும். அதற்காக இறுதிவரை உழைக்க வேண்டும். பலனைப் பெற்று பெருமிதம் அடைய வேண்டும். இதுதான் வாழ்க்கைத் தத்துவம். இந்த இலட்சியத்தில் ஈடுபடும்பொழுது, நல்ல நண்பர்கள் அறிவுரை கொடுக்கிறார்கள். உற்சாகத்தைக் கொடுக்கிறார்கள்புரியாத இரண்டுங் கெட்டான் நண்பர்கள், அவனை அந்தப் பக்கம் போகவிடாமல், காரணமில்லாமல் தடுக்கிறார்கள்,நயவஞ்சக நண்பர்களோ, செயல்பட விடாமல் தடுக்கிறார்கள். ஒருவன் முன்னேறவேண்டுமானால் உதவியையும் உற்சாகத்தையும் கொடுக்கிற நண்பர்களையே பெற வேண்டும். அதுதான் ஆரோக்கியமான நட்பாகும்.

O O O

**கியாதியும் வியாதியும்**

இறக்கும் பொழுது கியாதியுடன் (புகழுடன்) இறப்பவர்கள் எல்லோரும், சிறந்த மனிதர்களாக வாழ்ந்து சென்றவர்கள் ஆவார்கள். வெறும் வியாதியுடன் இறப்பவர்கள், சரியாக வாழவில்லை என்றே நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. 'வியாதி என்பது சிறுகச் சிறுகச் செய்த தவறுகளுக்குத் தண்டனை' என்று தானே நமக்கு நினைக்கத் தோன்றுகிறது!!

O O O

**முடியும் பிள்ளைகளும்**

தலையிலிருந்து விழுந்த முடியைப் பார்த்து, அதற்கு சொந்தக்காரன் சிந்தை தளர்ந்து பேசுகிறான். உன்னை வளர்க்க எத்தனை பாடு பட்டிருப்பேன். எவ்வளவு செலவழித்திருப்பேன். எப்படியெல்லாம் பாதுகாத்திருப்பேன். இப்படி நன்றியில்லாமல் என்னை விட்டுப்போகிறாயே! என்னை கேவலப்படுத்திவிட்டுப் போகிறாயே. அவன் அலறலுக்கு அந்த முடி பதில் கூறுகிறது. உங்கள் வாரிசுகள் மட்டும் யோக்கியமோ! உங்கள் பிள்ளைக் குட்டிகள் பிரிந்து போவது, நடந்து கொள்வது போலத்தான் நாங்களும். இதைப் போய் பெரிதுபடுத்திக்கொள்கின்றீர்களே! விழுந்த முடி காற்றிலே மிதந்து கொண்டே சென்று விட்டது. முடியின் விசுவாசம்தான் இன்று பிள்ளைகளின் விசுவாசத்தின் பிரதிபலிப்பாக இருக்கிறது.

O O O

**விளையாட்டு உணவு**

குழந்தைகளுக்கு விளையாட்டு என்பது பால் போன்றது. சிறுவர்களுக்கு பலகாரம் போன்றது. இளைஞர்களுக்கு அறுசுவை விருந்து போன்றது. வயதானவர்களுக்கு பலம் தருகிற 'டானிக்' போன்றது. வியாதியால் அவதிப்படும் வியாதியஸ்தர்களுக்கோ அது கைகண்ட மருந்தாகப் பயன்படுகிறது. விளையாட்டு ஔஷதம் என்பது மண்ணுலகின் தேவாமிர்தமாகும்.

o o o

**இரக்கத்தின் மறுபக்கம்**

இரக்கப்படுகிற எவனும் இந்தக் காலத்தில் ஏமாளி என்று தான் அழைக்கப்படுகிறான். ஆண்களுக்கு இரக்கம் காட்டினால் கடனாளியாக வேண்டியிருக்கிறது. பெண்களுக்கு இரக்கம் காட்டினால் அது பேராபத்தில் போய் முடிகிறது. இருந்தாலும் இரக்கம் காட்டாமல் எப்படி இருக்க முடிகிறது. தெரிந்து கொண்டே எதிரே உள்ள குழியில் விழுகிறோம் என்று புரிந்து கொண்டே பள்ளத்தில் விழுந்து, சிரமப்பட்டு முயன்று மேலேறி வந்து மீண்டும் விழமுயன்று கொண்டிருக்கிறோம். இரக்கத்தின் மறுபக்கம் இறக்கமாக அல்லவா முடிகிறது.

o o o

### கைப்பம்பு சமுதாயம்

தண்ணீர் வேண்டுமென்று பம்பை முதன் முதலாக அடிக்கும் பொழுது குழாயில் தண்ணீர் வருவதில்லை, கொஞ்சம் தண்ணீரை நாம் ஊற்றி விட்டு. அடிக்கத் தொடங்கினால் தண்ணீர் வருகிறது. அதுபோலவேதான் வியாபாரமும், நாம் மூலதனமாகக் கொஞ்சமாவது போட்டால்தான் வியாபாரத்தையே ஆரம்பிக்க முடியும். அதிக லாபம் வேண்டுமென்றால் அதிக மூலதனம் போட்டாக வேண்டும். இன்றைய சோஷலிச சமுதாயத்தில், பணக்காரன்தான் பணக்காரனாக முடிகிறது. ஏழைகள் ஏழைகளாகத்தான் ஆக முடியும். ஏனென்றால் நமது சமுதாய அமைப்பு: கார்ப்பரேஷன் கைப்பம்பு போலத்தான் அமைந் திருக்கிறது.

o o o

### அடிமைப் புகழ்ச்சி

புகழ் பெறுவதற்காக அடிமை போல உழைக் கலாம். ஆனால், புகழ்ச்சிக்காக அடிமைபோல நிற்கக் கூடாது. புகழ்ச்சிக்கு அடிமையாகவும் ஆகக் கூடாது. ஏனெனில், அது அறிவார்ந்தவனாக ஒருவனை உயர்த்தாது.

o o o

**ஒரு நாளைக்கு போதுமா?**

ஒரு நாளைக்கு மகிழ்ச்சியாக இருக்க வேண்டு மென்றால் நாம் எப்படி வேண்டுமானாலும், விருப்பம் போல வாழ்ந்து விடலாம். ஆனால், தினந் தோறும் நாம் மகிழ்ச்சியாக வாழவிரும்பினால், கொஞ்சம் கட்டுப்பாட்டோடு இருந்து தான் தீர வேண்டும். அதாவது உள்ளத்தில் வாய்மை, உடலில் தூய்மை, வழியில் நேர்மை, சிரமம்தான். ஆனால் இதில் தொடர்ந்து இன்பம் கிடைக்கிறதே!

o o o

**ஜீரணித்த சினிமா**

சினிமா, மக்களை சீரழித்து விட்டது என்கிறார்கள். இல்லை மக்களை சினிமா ஜீரணித்து விட்டது. அவ்வளவு தான்.

o o o

**உண்மையான அன்பு**

உண்மையான அன்பு **கொடுத்து** மகிழ்கிறது. போலியான அன்பு எப்பொழுதும் **எடுத்து** மகிழ் கிறது. சில சமயங்களில் **தடுத்தும்**, பல சமயங்களில் **கெடுத்தும்** மகிழ்கிறது.

o o o

**கனக்கும் தலை**

தலை கனக்கிறது என்று தனது தலையில் உள்ள சுமையை இறக்கி வைக்கலாம். முடியவில்லையென்றால் தள்ளி விடலாம். தவறில்லை.

தலை கனக்கிறது என்று தலையையே எடுத்து விட வேண்டுமென்று முயல்பவனை எப்படி அழைப்பார்கள்! உதவி செய்யும் உயிரான நண்பனை உதறித்தள்ள முயல்பவனும். உதறி விடுபவனும் இந்த நிலைக்குத்தான் ஆளாவான்.

O O O

**கஷ்டம் வேண்டாம்**

நாம் கஷ்டப்பட்டு வாழலாம். அது தவறில்லை. ஆனால், பிறரை நாம் கஷ்டப்படுத்தி வாழக் கூடாது. ஏனெனில், அது தர்மமில்லை.

O O O

**சிரித்து வாழவேண்டும்**

நாடும் சுகமெல்லாம் நானிலத்தில் ஒன்றுதான்
பாடும் பயனும் பல்சுமையே—ஓடும்
காலத்தைப் பழித்துநல் கோலம் இழக்காமல்
சீதத்தால் சிரித்தே வாழ்!

O O O

முள் செருப்பு

தொடர்ந்து உண்மை பேசுகிறவன் முற்பகுதியில் வேதனையடைந்தாலும், பிற்பகுதியில் பெருமையுடனும், பேரானந்தத்துடனும் வாழ்கின்றான். தொடர்ந்து பொய் சொல்கிறவன் முற்பகுதியில் பெருமையோடு வாழ்வதுபோலத் தோன்றினாலும் பிற்பகுதியில் பேரழிவினை அடைகின்றான். தோல் செருப்பு நடக்க உதவும். நாளெல்லாம் உதவும். முள் செருப்பு எப்படி உதவும்?

o o o

உப்புமலை

பிறரைக் குற்றம் சொல்லத் தெரியும் மனிதர்களுக்கு, தாங்கள் குற்றம் செய்யாமல் வாழத் தெரியவில்லையே! மற்றவர்கள் குறைகள் தாம் அவர்களுக்கு மலையாய் தெரிகிறது. அந்த மலையை நினைத்து நினைத்து அவர்கள் தங்கள் வாழ்கையை மடுவில் வீழ்த்திக் கொள்கிறார்கள். தம்மைத் திருத்திக் கொள்ளத் தெரியாத மனிதர்கள்தாம் இன்று தலைவர்களாக இருக்கின்றார்கள். தலைமை சரிதானே! உப்பை மலையாகக் குவித்துக் காண்பித்தாலும் சர்க்கரை சுவை வந்துவிடப் போவதில்லையே!

o o o

**ஓட்டைப் படகு**

சுழித்து வரும் வெள்ளத்தின் மீது மிதந்து கொண்டு, பழித்தபடி துணிச்சலாகப் பயணம் போக உதவுவது நல்ல படகுதானே! ஓட்டைப்படகாக இருந்தால் ஊர்போய்ச் சேரமுடியுமா? துன்ப வெள்ளங்கள் கரைபுரண்டோடும் நமது வாழ்க்கையிலே, ஓட்டைப் படகுபோல நோஞ்சா உடம்பும், அதற்குள்ளே ஒடிங்கிக்கிடக்கும் மனமும் இருந்தால், துணிவான பயணம், கனிவான பயணம் எப்படி முடியும்?

o o o

**சாதிப்பது எப்படி?**

மனதை அதைரியப் படுத்தி, தளர்ச்சியடையச் செய்கின்ற நிகழ்ச்சிகள் தான் வாழ்க்கையில் நிறைய நடக்கின்றன. எப்பொழுதோ ஒருமுறை தான் நினைப்பது போல் நடந்து நெஞ்சை மகிழ்விக்கிறது. இந்த ஒரு மகிழ்ச்சியை வைத்துக் கொண்டு தான் அதைரியப்படுத்தும் நிகழ்ச்சிகளை நாம் அலட்சியப்படுத்த வேண்டும். ஆட்டிப்படைக்க வேண்டும். வென்று சாதிக்க வேண்டும்.

அது தான் அறிவின் வெற்றி. வாழ்க்கையின் வெற்றியுமாகும்.

o o o

**வலுத்தவனும் அலுத்தவனும்**

வலுத்தவன் (வலிமை உள்ளவன்) வசதியோ பணமோ இல்லாத வாழ்விலும், வலிமையுடன் போராடி, சுகமாக வாழ்கிறான். அலுத்தவனோ (வலுகுறைந்த உடல் உள்ளவன்) வாழ்க்கையில் வசதிகள் பல இருந்தாலும், நோய்களுக்கும் கவலைகளுக்கும் ஆளாகி, அவற்றோடு போராடியே சாகிறான். இதுதான் இயற்கையின் தர்மக் காட்சியாகப் பெருகிக் கொண்டிருக்கிறது.

o o o

**பயிற்சியாளரும் நடுவரும்**

பயிற்சியாளரும் நடுவரும் விளையாட்டுக்களின் செம்மைக்கும் சீர்மைக்கும் தான் பணியாற்றுகின்றார்கள். அடிப்படை ஒன்றுதான் என்றாலும் முடிவில்தான் மாறுபடுகின்றார்கள்.

விளையாட்டு வீரர்கள் செய்யும் தவறுகளைக் கண்டுபிடித்து, தண்டிப்பது நடுவரின் கடமை. விளையாட்டு வீரர்கள் செய்யும் தவறுகளைக் கண்டுபிடித்து, திருத்தி முன்னேற வைப்பது பயிற்சியாளரின் கடமையாகும்.

o o o

**தோலும் தொழிலும்**

ஒருவரை கறுப்பு அல்லது சிவப்பு என்று பிறருக்குக் காட்டுகின்ற தோலின் நிறம் மட்டும் ஒருவருக்குப் பெருமையைத் தராது. அவரவரது தொழிலின் திறம்தான் பெருமையைத் தரும்.

O O O

**மனிதத்தனம்**

சோறு போட்ட எஜமானன், தன்னை எத்தனை முறை அடித்தாலும் நாய் கடிப்பதில்லை. எதிர்த்துப் பாய்வதில்லை. வாலை சுருட்டிக் கொண்டு அடங்கிக் கிடக்கும். பிறகு வாலை ஆட்டிக் கொண்டு அன்பொழுகப் பின் தொடரும். ஆனால் சோறு போட்ட எஜமானனை சோறுதின்ற மனிதன் என்னென்ன பேசுகிறான் என்னென்ன செய்கிறான், இப்படி அறிவிருந்தும் யோசிக்காமல் அடாது செய்வதால்தான், மனிதன் கவலைகள் நெருக்க வாழ்ந்து கொண்டிருக்கிறான். மனிதன் படும் வேதனைகள் அவன் செயலுக்கு கிடைக்கும் தண்டனைகள். தான் தண்டனைகளை அனுபவித்துக் கொண்டே தவறுகளை மீண்டும் செய்கிறானே அதுதான் மனிதத்தனம் - அவனை மாற்றவே முடியாது!

O O O

**தடம் புரளும் தலைவர்கள்**

எஞ்சின் ஓட்ட வேகத்திற்கு ஏற்றாற் போல ரயில் பெட்டிகள் ஓடுகின்றன. தண்டவாளத்தில் எஞ்சின் ஓடுகின்றவரை, பெட்டிகளின் ஓட்டமும் சரியாகத்தான் இருக்கும். எஞ்சின் இறங்காவிட்டாலும் பெட்டிகளும் சில சமயங்களில் தடம் புரண்டு விடுவதும் உண்டு. தலைவர்கள் என்பவர்கள் நீதிகள், நியாயங்கள், நெறிமுறைகள் என்று தங்கள் தொண்டர்களுக்கு அறிவுரை தருவதும் உண்டு. தலைவரும் தடத்தில் போகிறவரை தொண்டர்களும் தடத்தில்தான் போகிறார்கள். தங்கள் சௌகரியத்திற்காக, தலைவர்கள் நீதி நியாயங்களை மீறும்பொழுது, தொண்டர்கள் அவற்றைப் பின்பற்றுவதும் நியாயம்தானே! தடம் புரளும் தலைவர்கள் இருக்கும்வரை முடமாகாமல் தொண்டர்கள் எப்படி இருக்கமுடியும்? இன்றைய சமுதாயம் கீழ்நோக்கிப் போவதற்கு இத்தகைய தடம் புரளும் தண்டவாளத் தலைவர்கள்இருப்பதுதான் காரணம்.

o o o

**பணம்... பணம்... பணம்**

சிலர் சம்பாதிப்பதற்காகச் செலவு செய்கிறார்கள். அவர்களுக்குப் பெயர் வியாபாரிகள். பலர் செலவு செய்வதற்காக சம்பாதிக்கின்றார்கள். அவர்களோ உத்தியோகஸ்தர்கள்.

o o o

**நமது ஜனநாயகம்**

ஒரு பகுதியில் பல சிறு சிறு கிணறுகள் இருக்கின்றன. அங்கே தேவையான அளவுக்குத் தண்ணீர் ஊறுகிறது. மக்களுக்கு உதவி புரிகிறது. திடீரெனப் புதியதாக ஒரு கிணறு உருவாகிறது. பெரிய கிணறு. அதுவும் அதிக ஆழமுள்ள கிணறு புதிய கிணற்றுக்கு எல்லா நீரும் வந்து விடுகிறது. சிறுசிறு கிணறுகள் நீரின்றி காயத் தொடங்கு கின்றன. ஏழை ஏழையாகவே போகவும், பணக்காரன்பணக்காரனாகவே போவதும் இப்படித் தான். இந்த மாதிரிதான் நமது ஜனநாயக சமுதாய அமைப்பு இருக்கிறது.

O O O

**சிந்தனையின் சிலிர்ப்பு**

வயதும் உடலும் முதிர்ந்து கொண்டே இருக் கிறது என்றால், வாழ்க்கையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து கொண்டே இருக்கிறோம் என்பதுதானே அர்த்தம் முடிந்து போவதற்குள் வந்து போன அடையாளத்திற்காக நாம் எதாவது ஒரு மகத்தான காரியத்தைச் செய்ய வேண்டாமா? செய்தாகத்தான் வேண்டும். அதுதான் வாழ்க்கை லட்சியம்.

O O O

**குழப்பம்...குழப்பம்**

சத்தமிட்டுக் கத்தி அகவுகின்ற மயிலின் குரலை கேட்கும் பொழுது மனதில் எத்தனை வெறுப்பு அதிர்ச்சி. இத்தனை அழகான மயிலுக்குப் போய் இறைவன் இப்படி குரலைக் கொடுத்திருக்கிறானே. கறுத்த குயிலுக்கு காணாமிர்தமான இனிமை ஏன் இப்படி? இயற்கையின் அமைப்பே இப்படித்தான் இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தி இல்லாத தற்காக பொல்லாத குழப்பம் ஏன்? மனப்பக்குவத் திற்கு ஒரு மணியான காட்சியல்லவா இது!

o o o

**தாமரைக் குளம்**

தாமரைக் குளத்திலே தண்ணீர் நிறைந்திருந் தால், அதில் பூக்கும் பூக்களும் மேலே அழகாகத் தெரியும். தண்ணீர் உயர உயரத் தாமரையும் உயரும்.

தண்ணீர் இல்லாமல் வற்றிவிட வேண்டும் நாங்கள் மட்டும் (பூக்கள்) உயர்ந்து நிற்கவேண்டும் என்று பூக்கள் விரும்பினால் அது எப்படி? அற்பத் தனமான ஆசைதானே! தனக்கு உதவும் முதலாளி அழிந்துவிட வேண்டும். தான் மட்டும் உயர வேண்டும் என்று ஒரு தொழிலாளி விரும்பினால் அது என்ன நியாயம்?

o o o

**தக்காளி தர்மம்**

என்னை ஒரு கூடை தக்காளிப் பழம் வாங்கி வரச் சொன்னார்கள். பல கடைகளில் புகுந்து, மிகவும் சிரமப்பட்டு, நல்ல பழக்கூடை ஒன்றைத் தேர்ந்தெடுத்து வாங்கிக் கொண்டு வந்தேன். அத்தனைப் பழங்களிலும் ஒரு பழம் நசுங்கி அழுகிய நிலையிலே இருந்தது. இப்படியா பழம் வாங்கி வருவது என்று ஒரு நசுங்கிய பழத்தைக் காட்டி, கோபமாகக் கேட்டார்கள்.

நல்ல பழங்களாக அதிகம் வாங்கியதற்காகப் பாராட்டவில்லை. ஒரு அழுகிய பழத்திற்காக ஆத்திரமான குற்றச்சாட்டு. ஆயிரம் நல்லது செய்தாலும், ஒரு சிறு தவறு அத்தனை நல்லதையும் கெடுத்துவிடுகிறதே! இதுதான் சமுதாய தர்மமாக அமைந்து போயிருக்கிறது. போற்றும் பண்பு தலை தூக்கி எழுந்தால்தான், பொய்யும் தீமையும் புறம் போகும். இல்லையேல் தலையில் அமர்ந்து ஆகடியம்தான் செய்யும்.

O O O

**லீலா விநோதம்**

ஒருவனுக்கு வசதி அதிகமாக ஆக, ஆக வக்ரமங்கள்தான் பீறிட்டுக் கிளம்புகிறது. சிறிய ஒரு துன்பத்தைக்கூட தாங்கிக் கொள்ள முடியாதவாறு மனம் அடித்தளமாகத் திரியத் தொடங்குகிறது.

O O O

**உலகக் கொடுமை**

பசிக்கும் பொழுது சாப்பிட வழியில்லை. சம்பாதிக்கவும் வகையில்லை. சம்பாதிக்கும் வழி தெரிந்து, கையிலே நிறைய வசதி வந்த பிறகு பசிக்குச் சாப்பிட வழியில்லை. பல நோய்கள் தொலை. பணக்காரனாக இருந்து பசித்துக் கிடப்பதைவிட, வேறு கொடுமை இந்த உலகத்திலே இல்லைதானே!

O O O

**முட்டாள்கள் பரவாயில்லை**

மூட நம்பிக்கைகளை முட்டாள்தான் வெறியோடு பின்பற்றுகின்றார்கள் என்றெல்லாம் தாக்கிப் பேசுபவர்கள் உண்டு. மூட நம்பிக்கைகளைவிட அவற்றைப் பின்பற்றும் முட்டாள்களைத்தான் அறிவாளிகள் அதிகம் பின்பற்றுகின்றார்கள். ஏன்? மூட நம்பிக்கைகளுக்கு முன்னே, அறிவுத்தனம் அடிபட்டுப் போய்விடுகிறது. ஏன்? அதுதான் மனிதத்தனம்.

C O O

**நம்பிக்கையான நிம்மதி**

நிகழ்காலத்திலே நிம்மதி. எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை. கடவுளின்மேல் முழு நம்பிக்கை வைத்து, உண்மையாக உழைப்பவர்களுக்குக் கிடைக்கின்ற உயர்ந்த பரிசாகும்.

O O O

**அவசரத்தின் ஆவேசம்**

நமக்கு எதிலும் ஆவேசம்தான். எப்பொழுதும் அவசரம்தான் என்றாலும் நாம் எதிர்ப்பார்பதுபோல எது நடக்கிறது? யார் நடக்கிறார்கள்? யார் உதவு கிறார்கள். துடிக்கும் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். சாமர்த்தியமாக சூழ்நிலையை வெற்றி கொள்ளத் தெரிய வேண்டும். இல்லை யென்றால்-குதர்க்க சூழ்நிலையால் குழப்பம் அடைந்து, உள்ளதையும் இழந்து போக வேண்டியது தான்.

அவசரத்திற்கு ஆவேசம் உண்டு. ஆனால் அது போடும் வேஷங்களை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. புத்திசாலிகள் பொறுமை யால் சாதித்துக் கொள்கிறார்கள். அவசரக்காரர்கள் ஆத்திரப்பட்டு அனைத்தையும் வீணாக்கிக் கொள்கின்றார்கள். அவசரப்படாமல் அவசரத்தை சந்திக்கிறவர்களே வெற்றியாளர்கள். அந்த நிலை பெற எந்தக் காலம் ஆகுமோ!

O O O

**யானைச் செல்வம்**

யானை தனக்கு உணவூட்டி, உற்றதை யெல்லாம் செய்து காப்பவனையே கொன்றுவிடு கிறதே! செல்வமும் அப்படித்தான். கஷ்டப்பட்டு சேர்த்து காப்பாற்றிக் கொண்டிருப்பவனையே அழித்து விடுகிறதே! ஏன்?

O O O

### தற்காலம்

சம்பிரதாயம் என்பது தொன்று தொட்டுத் தொடர்ந்து வருகிற வாழ்க்கைமுறை. ஏனென்று தெரியாமலேயே எல்லாவற்றையும், விடாப்பிடியாக, முடிந்தவரை கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொண்டு பின்பற்றி வாழும் வாழ்க்கை சோதனை அப்பியாசம்.

சௌகரியம் என்பது வேண்டிய இடத்தில் வேண்டியவாறு, இருந்தோ விலகியோ, மேற்கொண்டு செய்யும் முறையாகும்.

சம்பிரதாயத்தைப் பின்பற்றும் பொழுது சௌகரியத்தைப் பார்க்க முடியாது. சௌகரியத்தை நினைத்தால், சம்பிரதாயம் அடிபட்டுப் போய் விடும் சம்பிரதாயத்துக்கும் சௌகரியத்துக்கும் உள்ள போராட்டம்தான் பழமைக்கும் நவீன காலத்துக்கும் உள்ள போராட்டமாக இப்பொழுது, வெற்றி பெறுவது சௌகரியமாகத்தான் ஆகிவிட்டது.

o o o

### உண்மையான பக்தி

உண்மையான பக்தி சொல்லித் தெரிவிக்க வேண்டிய அவசியமேயில்லை. அவர் செய்கின்ற செயல்களை வைத்தே உண்மையான பக்திமானை அறிந்துகொள்ள முடியும். பக்தி நெறி ஓதி விட்டு விடுவது அல்ல. ஓதி ஒழுகி நிற்பது.

o o o

## இடையர்களும் கடையர்களும்

வைத்தியர்கள் சொல்வதற்கு முன்னே உடலை நன்றாக பாதுகாத்துக் கொண்டு நலமாக வாழ்பவர்கள் முதல் தரமானவர்கள். அவர்கள் வாழ்க்கையில் சிறக்கும் முதல்வர்கள் ஆவார்கள். வைத்தியர்கள் எச்சரித்த பிறகு, வந்த நோய்களை மாற்றுவதற்காக உடலைப் பாதுகாத்து வாழ முயல்பவர்கள், இடைத்தரமானவர்கள். சொல் பேச்சுக் கேட்டு சுகமாக வாழ முயலும் இடையர்கள்.

ஆனால், தானும் முயலாமல், வைத்தியர் எச்சரித்த பிறகும் நடக்காமல்,உடலை மறப்பவர்கள் கடையர்கள் ஆவார்கள். ஆமாம்! அவர்களை நோய்களும், துன்பங்களும் தினம் குடைந்து கொண்டும், கடைந்து கொண்டும் கிடக்கும். கடையப்படுவர் கடையர்தானே!

o o o

## பண சக்தி

பணம் குறையும்பொழுது உடலில் சோர்வும், மனதில் பலஹீனமும் ஏற்படுகிறதே! ஏன்? பணத்திற்கு அப்படிப்பட்ட சக்தி இருக்கிறது. இல்லையென்றால், மனிதக் கூட்டமே பணத்தின் பின்னே முண்டியடித்துக் கொண்டு ஏன் ஓடுகிறது? அந்தப் பிரதிபலிப்புதான் பணக் குறைவும் சக்திக் குறைவும்.

o o o

**ஒரு பரிதாபம்**

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அடிப்படை தேவை உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க ஒரு வீடு. அவற்றிற்காகத்தானே அல்லும் பகலும் பாடுபடுகிறோம். ஆயிரம் பிரயத்தனப்படுகிறோம். அவற்றை அடைந்தும் விடுகிறோம். ஆனால்... ஆனால்... உணவை சுவைத்து உண்ண முடியாத சுவையற்ற சூழ்நிலை; பகட்டான உடைகள் உடுத்தினாலும், எடுப்பாகத் தெரியாத தொய்ந்த நிலை. வீட்டில் மெத்தையில் படுத்தாலும் உறங்க முடியாத முள் நிலை. ஏன்? இந்த மூன்றையும் அனுபவிக்க வேண்டுமானால், நலமான உடல் இருந்தால்தானே முடியும். நமது மனித இனம், இந்த மூன்றையும் அனுபவிக்க உதவும் உடலை மறந்துவிடுகிறதே; பரிதாபமாக அல்லவா இருக்கிறது!

O O O

**பலஹீனம் போக்கும் வழி**

பிறரது தவறினைப் பொறுப்பதும், மன்னிப்பதும் உரம் வாய்ந்த உடலுள்ளவர்களால்தான் முடியும். ஏனெனில் உரம் வாய்ந்த உடலில்தான் உரம் வாய்ந்த மனம் இருக்கிறது. பலஹீனம் பிறரது தவறைக் கண்டு பதைபட்டும். பொங்கியெழும். பதிலுக்குப் பதில் செய்யத் துடிக்கும். ஆகவே பலஹீனத்தை ஒழிக்க. விளையாட வாருங்கள்!

O O O

## முற்பகலும் பிற்பகலும்

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற முதுமொழிக்கு விளக்கம் எப்படி மாறி வந்திருக்கிறது பார்த்தீர்களா? முற்பிறவியில் செய்த தீவினை, பிற்பகலில் வந்து தண்டிக்கும் என்ற கருத்து இன்று பொய்யாகிப் போய்விட்டது. முற்பகல் என்பது காலை. பிற்பகல் என்பது மாலை. காலையில் செய்கின்ற குற்றங்களுக்கு அன்று மாலையே அவற்றிற்குரிய தண்டனை கிடைத்துவிடுகிறது. அதனால்தான் அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்ற பழமொழி மாறி, தெய்வம் அன்றே கொல்கிறது. அரசன்தான் நின்று கொல்கிறான் என்பதாக மாறிவிட்டிருக்கிறது. அதற்குரிய தண்டனை அவ்வப்பொழுதே கிடைத்து விடுகிறது என்பது மிகுந்த அனுபவப் பூர்வமான உண்மையாகவே விளங்குகிறது.

o o o

## சாதிப்பெருமை

ஒருவருக்குத் தான் பிறந்த சாதியால் பெருமை இல்லை. அவர் சொல்லுகின்ற சேதியால், சொல்லுகின்ற நீதியால் தான் பெருமை. புகழ். சாதியைக் காட்டிப் புகழ்பெற முனைபவர்கள் சகதியின் மேலே மெத்தை போட்டுத் தூங்க முயல்கின்ற மனிதத் தவளைகள் ஆவார்கள்.

o o o

**நீங்களும் வைத்தியர்தான்**

நோய் வந்தபின் அதைப் போக்கவும் மருந்து தந்தும் உதவுபவர் வைத்தியர். நோய் வராமல் உடற் பயிற்சி செய்து தடுத்து வாழ்பவரும் ஒரு வைத்தியர் தானே! நீங்களும் வைத்தியர் ஆகலாமே!

O O O

**விஷ சம்பளம்**

எந்த இடத்தில் யாரிடத்தில் எந்தப் பணியை செய்து கொண்டிருந்தாலும் சரி, அதை தன் சொந்தக்காரியம் போல சிந்தித்து, உண்மையாக உழைப்பவர்கள் தான் வாழ்க்கையில் சுகமாக இருக்கிறார்கள். வறுமை இருந்தாலும் கூட கவலையில்லாமல் வாழ்கிறார்கள். தன் குடும்பம் பிழைக்க உழைப்பதற்காக சம்பளம் தரும் எஜமானரை ஏமாற்றிக் கொண்டு வேலை செய்து காலத்தை ஓட்டுபவரை கடவுள் தான் தண்டிக்கிறார். ஏமாற்றிப் பெறும் சம்பளமும் விஷத்தைச் சாப்பிடுவதும் ஒன்று தான். கொஞ்சங் கொஞ்சமாக கொல்லுகிற சக்தி இரண்டுக்கும் நிறையவே உண்டு.

O O O

**மனிதத்தனம் — 1**

என்னைப் பார்க்கும்
எல்லோருக்கும்
பெருமூச்சு !
பொறாமைப்பேச்சு !
அதிர்ஷ்டக்காரன்
அவன்வந்தநேரம்
அனைத்திலும் வெற்றி
என்றெல்லாம் பேசுவோர்
ஏராளம் உண்டு !
ஆனால் !
எதிரே வருபவர்
யாராக யிருந்தாலும்
என்னைவிட அவர்கள்
எதிலும் மேலோர் !
அத்தனை அழகு
அப்படி அறிவு
அதிர்ஷ்டக் காரர்கள்
அதிசயப்பிறவிகள்
என்றெல்லாம் எண்ணி
உள்ளுக்குள்ளே
உலகக் குமுறல்கள்

ஏக்கப் படுகிறேன்
தூக்கம் கெடுகிறேன் நான் !
ஏன் அப்படி ?
இருப்பதால் திருப்தி
இல்லாத குயுக்தி
எப்படி ஏற்படுகிறது
இதற்கென்ன பெயர் ?
இதுதான் மனிதத்தனம்

O O O

மனிதத்தனம் – 2

ஆயிரம் ரூபாய்களை
வாய்க்குள்ளே போட்டு
விழுங்கி ஏப்பமிட்டு
வெளிச்சத்திலே
மண் நட்சத்திரமாய்
விழி பிதுக்கிக் காட்டும்
பட்டுச் சேலைக்குள்ளே
பதிந்த மேனியாள் அவள் !
வண்ணத்தில் கொஞ்சமும்
வளைந்து பின் போகாமல்

எச்சரிக்கையாய்
ஏராள நிமிடங்களை
இறைத்துப் பொறுக்கிய
நிறைவான ஜாக்கெட் !
அதற்கென்று பின்னணி
அலங்கார முன்னணி
இத்தனை ஒப்பனைகள்—
சித்திரப் பெண்ணாய்
சாலையில் நடக்கிறாள் !
வைரக் குவியலின்
பேழையாய் நெளிகிறாள் !
எதிரே ஒருத்தி
கீரைகள் சுமந்த
கிழங்கு உடல் காரி !
சொற்ப ரூபாய்க்கான
அற்பமான சேலையைச் சுற்றி,
தலை சுமை கனக்க
நெளியும் இடையுடன்
களைத்தே நடக்கிறாள் !
அந்த சேலைக்குள்ளே
அலங்காரி கண் பாய்ச்சல் !
அகோர மேய்ச்சல் !

அந்தச் சேலையும்
அழகாக இருக்கிறதே !
எனக்கும் ஒரு சேலை
இப்படி இருந்தால் !
அங்க லாய்ப்பு...
ஆவித் துடிப்பு...
ஏன் இப்படி ?
அது தான் மனித இனம் !

**மனிதத்தனம்—3**

தன்னைப் புரிந்து
தன் தகுதி தெரிந்து
இலட்சியம் அறிந்து
ஏற்றமுடன் நடந்து செல்ல
எந்த மனிதன் நினைக்கிறான்!
பிறரைப் பற்றியே பேச்சு
பிறர் வாழ்வே மூச்சு
குறை சொல்லி மகிழ்ச்சி !
நிறை தள்ளி இகழ்ச்சி !
பிறர் துயரில் கவர்ச்சி !
ஏச்சிலோ எழுச்சி;
ஏன் இப்படி ?

தான் உயர நினைக்காமல் -
தன்மையுடன் உழைக்காமல்
வீணாகிப் பேசுவதேன் !
சாணாக வளைவதேன் !
தெரிந்தும் ஏன் வதந்தி ?
தெளிய மாட்டார்கள் !
ஏன் இப்படி ?
அவர்கள் மனிதர்கள்.
அந்த மனிதத்தனம்
அவர்களை விடவே விடாது!

**மனிதத்தனம்—4**

தவறு இழைப்பது
தவறெனத் தெரியும்!
தண்டனை நிச்சயம்!
தன்மையும் புரியும்!
தருமமும் பழிக்கும்!
சமுதாயம் சபிக்கும்!
மனசாட்சி உறுத்தும்!
மாபாவம் வருத்தும்!
எல்லாம் தெரியும்!
யாருக்குத் தெரியாது?

ஒவ்வொரு மனிதரும்
உணர்ந்துதான் உள்ளனர்!
பிறகிங்கே தவறுகள்
பெருகியே வழிவதேன்?
சிறகு முளைத்ததுபோல்
சிறுமைகள் பறப்பதேன்?
விறகு நெருப்பாக
வெம்மைகள் சுடுவதேன்!
கடவுளைக் காட்டியும்
கருமத்தைக் காட்டியும்
நரகத்தைக் காட்டியும்
நல்லறிவு ஊட்டியும்
ஒட்டிக்கு ரெட்டியாய்
ஓங்குதே தவறுகள்!
பகுத்தறிவின் விளைவா?
படிக்காத நலிவா!
மறுபடி மறுபடி
மனிதன் தவறுக்குள்
நீந்தியே களிக்கிறான்!
நெஞ்சையே அழிக்கிறான்!
ஏன்?
அபராதம் கடுஞ்சிறை

அடிபிடி சட்டத்தால்
மறையவே இல்லையே!
குறையவும் இல்லையே!
ஏன்? ஏன்?
அதுதான் மனிதத்தனம்!
மாறாத கயமைத்தனம்!

**மனிதத்தனம்—5**

பல்லெல்லாம் கூசும்
புளிச்சக் கீரை
கண்ணால் பார்த்தாலும்
கசக்கும் பாகற்காய்
பக்கத்து வீட்டார்கள்
பதார்த்தம் தந்தால்
இதயமே இனிக்கிறது!
இன்னுமென கேட்கிறது!
நீங்கா நினைவோடு
ஏங்கியே கிடக்கிறது!
ஆனால்...
ஏலக்காய் முந்திரி
ஏராளத் திராட்சை
ஆவின்பால் தேங்காய்
அதற்கு மேல் சர்க்கரை

எடுப்பாய் போட்டு
இறக்கிய பாயசம்!
தின்னக் கசக்கிறது!
திகட்டியே தொலைக்கிறது!
ஏன் இப்படி?
அடுத்தவர் வீட்டின் மேல்
அக்கறையோ அக்கறை !
தடுத்தாலும் கேட்காத
தாராளப் பாசம்!
தங்கள் குடும்பமெனில்
தடுமாறும் தடித்தனம் ஏன்?
இது தான் மனிதத்தனம்
இது ஒரு மாதிரியான
இளிச்ச வாய்த்தனம்!

**மனிதத்தனம்—6 (முரண்பாடு)**

மாறாத மகிழ்ச்சி
மறையா மனஅமைதி!
மலரும் மனநிறைவு
மனிதர்க்குத் தினம் தேவை!
மதியுள்ளோர் உணர்வாரே
இது போனால் ஏது சுகம்?

அடுத்தவரை சீண்டுவதில்
அடைகின்ற அற்ப சுகம்!
அடுத்தவரைப் பழிப்பதிலே
அடைகின்ற மன அமைதி!
அடுத்தவரின் துன்பத்திலே
அழைக்கின்ற மனநிறைவு !
கெடுமதியும் கீழ்ச்செயலும்
கேளிக்கை ஆகிறதே !
பிறர் வாழ்வை நினைத்தபடி,
பிறர் செயலை முறித்தபடி
பேரின்பம் காண்பதற்கோ
பெற்றோமா பகுத்தறிவை !
நல்ல செயல் புண்ணியங்கள்
நல்ல மொழி கண்ணியங்கள்
தானம் தருமமென்று
தாராள வாய்ப்பந்தல் !
ஆனாலும் அக்ரமங்கள்
அடுத்தடுத்து நிகழ்வதும் ஏன்?
மாறாத மனிதத்தனம்
மண்டியிடக் காண்கிறோமே !
முரண்பாட்டின் மறு பெயரே
மனிதத்தனம் ஆகிறதோ!
எதற்கெடுத்தாலும்
என்னால் முடியாது?

என்பவர் எல்லாரும்
உண்மையில் உதிரிகள்!
ஓடாத தேர்கள்!
உறுதியிலா வேர்கள்!
முடியாது என்றபடி
முனகுவோர்க்கெல்லாம்
மூளையும் பஞ்சம்
மூலை தான் மஞ்சம்
பலஹீனப் பாயில்
படுப்பாரே நோயில்!
இன்றைய சோம்பேறி
நாளை பிச்சைக்காரன்
முடியாது என்பவன்
மூடமான மனிதனே!
பணத்திற்கு ஏக்கம்!
பகட்டிற்கு நோக்கம்!
சுகத்திற்குத் துடிப்பு
ஜெக ஜால நினைப்பு!
உட்கார்ந்து உறங்கி
ஒரு நூறு கனவினிலே
மல்லாந்து கிடப்பவர்
முன்னேறு வாரோ!
தெரிந்தும் ஏன் தான்
திசைமாறிக் கிடக்கிறார்!
நாளை நமதென்று
நம்பியே கழிக்கின்றார்?
அது தான் மனிதத்தனம்!
ஆறறிவோடு
அழியாத சோம்பல்தனம்!



டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தமிழ் இலக்கியத்தில் விளையாட்டுத்துறை நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும் என்ற முயற்சியில், இதுவரை 80க்கும் மேற்பட்ட நூல்களையும், 20க்கும் மேற்பட்ட கதை, கவிதை, நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவர் எழுதிய 'ஒலிம்பிக் பந்தயத்தின் கதை' எனும் நூல் 1977ம் ஆண்டும், 'விளையாட்டுக்களின் கதைகள், எனும் நூல் 1981ம் ஆண்டும் ''விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும்'' எனும் நூல் 1984ம் ஆண்டும் தேசிய விருதினைப் பெற்று இருக்கின்றன.

தமிழிலும், உடற்கல்வித் துறையிலும், முதுகலைப் பட்டமும், டாக்டர் பட்டமும் (M.A., M.P.Ed. Ph.D.) பெற்றுள்ள ஆசிரியர், வானொலி, டெலிவிஷன், வாரப் பத்திரிகைகளில் தொடர்ந்து விளையாட்டுத்துறை பற்றி பேசியும் எழுதியும் வருகிறார்.

தமிழில் முதன் முறையாக ''விளையாட்டுக் களஞ்சியம்'' எனும் விளையாட்டுத் துறை மாத இதழை 1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்தி பணியாற்றி வருகிறார்.

Printed at : Grace Printers, Madras - 33